பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 தை 15 திங்கட்கிழமை (28-01-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:64

# புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு அமைச்சர் தொண்டமான் விஜயம்!

## உள்ளூர் பொறுப்பாளருடன் மூதூரில் நேற்றுச் சந்திப்பு

திருகோணமலை,ஜனவரி28

**வீடமைப்பு, பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் நேற்று மூதூரில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டார். அங்கு அவர் விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் மற்றும் உள்ளூர் உறுப்பினர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.**

புதிய அரசு பதவிக்கு வந்த பின்னர் அந்த அரசின் அமைச்சர் ஒருவர் விடுதலைப் புலிகள் அமைப்பின் பிரதிநிதிகளைச் சந்தித்திருப்பது இதுவே முதல் தடவை ஆகும்.

தனது அமைச்சுச் செயலாளர் சகிதம் அமைச்சர் தொண்டமான் நேற்றுக் காலை திருகோணமலைக்கு வந்தார். அங்கிருந்து பலத்த பாதுகாப்புடன் கடற்படைப் படகுகளில் மூதூரைச் சென்றடைந்த அமைச்சர் பின்னர் கட்டைபறிச்சான் முகாமுக்கு வாகன அணியில் சென்றார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தையும் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தையும் பிரிக்கும் கட்டைபறிச்சான் படைமுகாமில் போய் இறங்கிய அமைச்சர், அங்கிருந்து பின்னர் ஒரு வாகனத்தில் தனது செயலாளர் சகிதம் புலிகளின் பகுதிக்குள் சென்றார்.

கோணித்தீவு என்னும் இடத்தில் அமைந்துள்ள புலிகளின் அரசியல் துறை அலுவலகத்தில் அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் ஜங்கரனை அமைச்சர் சந்தித்தார். சுமார் ஒரு மணி நேரம் அவருடன் அமைச்சர் கலந்துரையாடினார்.

"வன்னிக்கான பொருளாதாரத் தடை நீக்கப்பட்டது போன்று இங்கேயும் பொருளாதாரத் தடை நீக்கப்பட்டிருக்கும் என எதிர்பார்த்தேன். ஆனால் இங்கு வந்த பின்னர்தான் மக்கள் படும் அவலங்களைக் காணமுடிகிறது. கொழும்பு திரும்பியதும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் தொடர்பு கொண்டு இந்தப் பிரதேசத்துக்கான பொருளாதாரத் தடை உட்பட சகல தடைகளையும் நீக்க நடவடிக்கை எடுப்பேன்."

(14ஆம் பக்கம் பார்க்க)

### கைதிகள் வழிபட வசதியாக

## களுத்துறைச் சிறையில் நேற்று இந்து தெய்வங்கள் பிரதிஷ்டை!

கொழும்பு,ஜன.28

களுத்துறைச் சிறைச்சாலையில தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 391 தமிழ்க் கைதிகளும் வழிபாடுசெய்வதற்கு வசதியாக அங்கு இந்து தெய்வங்களின் சிறிய சிலைகள் நேற்று பிரதிஷ்டை செய்யப்பட்டன.

நேற்று சிறைச்சாலைக்கு விஜயம செய்த இந்து விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் தலைமையில் சிலைகள் பிரதிஷ்டை வைபவம் நடைபெறறது.

அமைச்சருடன் இராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்த ஆத்மகணானந்தாஜீ, இந்துமா மன்றத் தலைவர் கைலாசபதி ஆகியோரும் இந்து மத குருமார் சிலரும் நேற்று சிறைச்சாலைக்குச் சென்றிருந்தனர்.

கைதிகள் தினமும் வழிபட வசதி

(14ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கே சேவையில் ஈடுபட புதிய எரிபொருள் கப்பல்

யாழ் மாவட்டத்துக்கு ஒரேதடவையில் 10 லட்சம் லீற்றர் எரிபொருளை எடுத்துவர வசதியுள்ள எண்ணெய்த் தாங்கிக் கப்பல் ஒன்றை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வாடகைக்கு அமர்த்தியுள்ளது.

எதிர்வரும் 5ஆம் திகதி இந்தக் கப்பல் திருமலைக்குச் சென்று எரிபொருளை ஏற்றிக்கொண்டு காங்கேசன் துறைக்கு வரவிருக்கின்றது.

திருகோணமலைக்கும் காங்கேசன் துறைக்கும் இடையில் எரிபொருள் ஏற்றிவரும் பணியில் இக்கப்பல் தொடர்ந்து ஈடுபடும் என்று பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. (ஐ-3)

## அமைச்சர் மிலிந்த, ராணுவத் தளபதி மட்டு நிலைமைகளை நேரில் ஆராய்வு

மட்டக்களப்பு.ஜன.28

மட்டக்களப்பு மாவட்டத்தில் இயல்பு நிலையைத் தோற்றுவிப்பதற்கான நடவடிக்கைகளின் முன்னேற்றங்கள் குறித்து அமைச்சர் மிலிந்த மொறகொட, இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் பலகல்ல ஆகியோர் நேரடியாக ஆராய்ந்தனர். அமைச்சரின் வருகையை முன்னிட்டு பல இராணுவ, பொலீஸ் சோதனைச் சாவடிகளின் சோதனை நடைமுறைகள் நேற்றுத் தளர்த்தப்பட்டிருந்தன.

மட்டக்களப்பு நகரைச் சுற்றிப் பார்வையிட்ட அமைச்சர் மொறகொட, மட்டக்களப்பு மாவட்ட 233ஆவது

(2ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பை ஸ்தாபன ரீதியாக பலப்படுத்துவதற்கு நடவடிக்கை

கொழும்பு.ஜன.28

நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பை ஸ்தாபனரீதியாகப் பலப்படுத்த நடவடிக்கை எடுப்பதென கூட்டமைப்பின் நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேற்படி கூட்டம் நேற்று கொழும்பில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:-

☆ நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பை ஸ்தாபன ரீதியாக அமைத்து,

(2ஆம் பக்கம் பார்க்க)

## பதுளை சிறையில் நான்கு கைதிகள் உண்ணாவிரதம்

கொழும்பு,ஜன.28

பதுளை சிறைச்சாலையில் உளள விடுதலைப் புலிகள் இயக்க சந்தேகநபர்கள் நால்வர் நேற்றுக்காலை முதல உண்ணாவிரதம் ஆரம்பித்தனர்.

'எங்கள் மீதான குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்து வழக்குத் தொடருங்கள் அன்றேல் விடுதலை செய்யுங்கள்' என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இவர்களது விடுலை தொடர்பாக இருவார காலத்துக்குள் உரிய பதில தருவதாக பதுளை மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் கே.வேலாயுதம் உறுதி அளித்ததை அடுத்து நேற்று மாலை போராட்டத்தை இவர்கள் கைவிட்டனர். (ஐ-9)

## அரச சேவைக்கு ஆள் சேர்ப்பது இடை நிறுத்தம்

கொழும்பு,ஜன.28

அரச சேவைக்கு புதிய ஆள்சேர்ப்புக்களை தற்காலிகமாக இடைநிறுததுவது என்று அரசு முடிவு செய்துள்ளது.

நாட்டில் தற்சமயம் நிலவும் பொருளாதார நெருக்கடியைக் கருத்தில் கொண்டு ஆள்சேர்ப்புக்களை இடைநிறுத்தும்படி நிதி அமைச்சு செய்த பரிந்துரையை அடுத்து பொதுநிர்வாக அமைச்சு இந்த முடிவை எடுத்துள்ளது.



கிளிநொச்சி நகரப் பகுதியில் மலசலகூடக் குழிகள் மற்றும் கிணறுகளில் இருந்து அண்மைக்காலத்தில் மீட்கப்பட்ட மனித எலும்புக்கூடுகள் மற்றும் எச்சங்களையே படத்தில் காண்கின்றீர்கள். தற்போது இந்த எச்சங்கள் அக்கராயன் மருத்துவ மனையில் வைக்கப்பட்டிருக்கின்றன.

கிளிநொச்சி நகரும் அதனை அண்டிய பிரதேசங்களும் சிறிலங்கா அரசுப் படைகள் வசம் இருந்த சமயத்தில் அங்கு தமது வீடுகளைப் பார்க்கச் சென்று பின்னர் காணாமற்போன பொதுமக்களின் எலும்புக் கூடுகளே இவை என நம்பப்படுகின்றது. (படம்:தமிழ் நெற்)

## மன்னாரிலிருந்து கொழும்புக்கு இனி இரவு இரவாக மீன் வரும்

மன்னார்,ஜன.28

மீன்லொறிகளின் இரவுப் பயணத்துக்கு மன்னாரில் இதுவரை இருந்து வந்த தடை நேற்று நீக்கப்பட்டது. அதனால் இனிமேல் மன்னாரிலிருந்து கொழும்புக்கு முந்திய காலத்தைப் போல் இரவு இரவாக லொறிகளில் மீன்வரும்.

கடற்றொழில், நீரியல் வளத்துறைப் பிரதி அமைச்சர் மொஹிதீன் அப்துல் காதர் நேற்று மன்னாருக்கு விஜயம் செய்தபோது இதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்.

மன்னார் அரசாங்க அதிபர், பொலீஸ் அத்தியட்சகர் ஆகியோருடன் கலந்து பேசி, மீன் லொறிகளின் இரவுப் பயணத்துக்கு ஏற்பாடு செய்தார்.

மன்னாரில் வங்காலை அக்னேஸ்வர நூறு வீட்டுத்திட்டத் திறப்பு விழாவில் பிரதி அமைச்சர் கலந்து கொண்டார். (ஐ)

## புலிகள் மீது தடையை நீக்க தேரர் விதிக்கும் நிபந்தனை

கொழும்பு.ஜன.28

விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடையை நீக்குவதானால் முதலில் புலிகள் இரண்டு நிபந்தனைகளை நிறைவேற்றவேண்டும். அவர்கள் அந்த நிபந்தனைகளை நிறைவேற்றினால் தடையை நீக்குவது குறித்து ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

- இவ்வாறு கூறுகிறார் பேராசிரியா பெல்லன்வில விமலரத்ன தேரர். சிங்கள வாரவெளியீடு ஒன்றுக்கு அவர் இது குறித்துப் பேட்டியளித்துள்ளார்.

(2ஆம் பக்கம் பார்க்க)

## செயலகம் முன் மீனவர்கள் புதன் முதல் மறியற்போர்!

### சுழற்சி முறையில் தொடர்ந்து நடக்கும்

யாழ்ப்பாணம்,ஜன.28

குடாநாட்டு மீனவர்கள் எந்த விதமான தடைகளும் இன்றி எந்த நேரமும் கடலில் இறங்கி மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டும்.

இந்தக் கோரிக்கையை முன்வைத்து நாளைமறுதினம் புதன் கிழமை முதல் யாழ்.செயலகம் முன்னால தொடர்ச்சியான மறியற்போராட்டத்தை நடத்துவதற்கு கடற்றொழில சங்கங்கள் தீர்மானித்திருக்கின்றன.

யாழ்மாவட்டத்திலுள்ள கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கான கூட்டம் நேற்று முற்பகல் 11 மணியளவில் வடமாகாண கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தில் நடைபெற்றது.

அந்தக் கூட்டத்திலேயே இந்த

(2ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

அடுத்த மாதம் முதலாம் திகதி முதல்

# குப்பை அள்ளவும், தண்ணீர் வழங்கவும் யாழ்.மாநகராட்சிமன்றம் வரி அறவிடும்

## மாநகர முதல்வர் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.28

அடுத்த மாதம் முதல் யாழ்.மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குப்பையகற்றல், குடிதண்ணீர் விநியோக நடவடிக்கைகளுக்கு வரி அறவிடப்படும்.

- இவ்வாறு யாழ்.மாநகர முதல்வர் செல்லன் கந்தையன் அறிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.மாநகராட்சி மன்றத்திடம் குப்பை கூழங்களை அள்ளுவதற்குப் போதிய வாகனவசதிகள் இல்லாத நிலையில் இதுவரைகாலமும் வாடகைக்கு அமர்த்தப்பட்ட வாகனங்கள் மூலமாகவே குப்பையகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

வாடகைக்கமர்த்தப்பட்ட வாகனங்களும் எரிபொருள் தட்டுப்பாட்டில் தற்போது சேவைக்கு வருவதற்குப் பின்னடிக்கின்றன. இதனால் இனி மேல் சில குறிப்பிட்ட தினங்கள் மாத்திரமே வாகனங்கள்மூலம் குப்பை கூழங்களை அகற்றவேண்டியுள்ளது.

மக்கள் குப்பை கூழங்களை உரப்பைகளிலோ அல்லது பெட்டிகளிலோ சேகரித்து வைத்து எமது வாகனங்கள் வரும்போது அவற்றை ஒப்படைக்கலாம்.

வாழைக்குற்றி மற்றும் கழிவு மரங்கள் போன்றவற்றைத் தத்தமது காணிகளில் சேகரித்துவைத்துவிட்டு அது சம்பந்தமாகத் தமது பகுதி சுகாதார மேற்பார்வையாளர் ஊடாகக் கடிதம் மூலம் தொடர்புகொண்டால் அவற்றை அகற்ற உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இதற்குக் கட்டணமாக ஒரு சிறு தொகைப் பணமும் அறவிடப்படும்.

இதுவரை காலமும் ஜீ.ரீ.இசற் தொண்டு நிறுவனம் மூலமாக வழங்கப்பட்டுவந்த குழாய் தண்ணீர் விநியோகம் யாழ்.குடாநாட்டின் பலபகுதிகளிலும் நிறுத்தப்பட்டுவிட்டது. இதே போல் நகரப்பகுதி விநியோகத்தையும் நிறுத்தப் போவதாக அந்நிறுவனத்தினர் அறிவித்துள்ளனர்.

இதற்கமைவாக இலங்கையின் ஏனைய பகுதிகளில் நடைமுறையில் உள்ளதைப் போன்று, யாழ்.மாநகர சபைக்குட்பட்ட பகுதியிலும் குடிதண்ணீர் விநியோகத்திற்கு வரி அறவிடப்பட உள்ளது. இதன் மூலம் விநியோகத்தினை சீராக மேற்கொள்ள முடியும் என்று நம்புகின்றோம்.

நாளை மறுதினம் 30 ஆம் திகதி நடைபெற உள்ள மாநகராட்சி மன்றக் கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பாக ஆராயப்பட்டு, அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு கொண்டுவரப்படவுள்ளது.

- இவ்வாறு மாநகர முதல்வர் மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-ரி)

## இலங்கைத் திருச்சபையின் யாழ். முதல்வராக நேசகுமார்

### கொழும்பில் இன்று பதவியேற்பு



யாழ்ப்பாணம்,ஜன.28

இலங்கைத் திருச்சபையின் (அங்கிலிக்கன் திருச்சபை) யாழ்.குருமுதல்வராக வண.எஸ்.பி. நேசகுமார் இன்று பதவியேற்கின்றார்.

திருச்சபையின் கொழும்பு பேராலயத்தில் பேராயர் டுவிப் டி சிக்கேரா முன்னிலையில் அவர் பதவிப்பிரமாணம் செய்யும் வைபவம் இன்று மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது.

1987 ஆம் ஆண்டு குருவாக திருநிலைப்படுத்தப்பட்ட வண.நேசகுமார், 1993ஆம் ஆண்டு யாழ்.பிரதேச முதல்வராக நியமிக்கப்பட்டிருந்தார். தற்சமயம் யாழ்.குருமுதல்வராகப் பதவியேற்கிறார்.

இவரது இடத்துக்கு யாழ்.பிரதேச முதல்வராக வண.எஸ்.ஜே.ஞானப்பொன்ராஜா நியமிக்கப்படவுள்ளார். (ஐ-3-6)

## செயலகம் முன்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடிவு எடுக்கப்பட்டது.

மேற்படி கூட்டத்திற்கு தலைமை வகித்து உரையாற்றிய சமாசத் தலைவர் எஸ்.தவரட்ணம் தெரிவித்ததாவது:-

இலங்கையின் ஏனைய மாவட்டங்களில் மீன்பிடித் தொழிலுக்கு அரசாங்கம் கொடுக்கும் முக்கியத்துவம் யாழ்.மாவட்டத்திற்கும் வழங்கப்படவேண்டும்.

விடுதலைப் புலிகளும், அரச படையினரும் கைகுலுக்கிக் கொள்கின்றனர். ஒருவர் பிரதேசத்தினுள் ஒருவர் சென்று வருகின்றனர். அப்படி இருக்கையில், மீனவர்கள் கடலில் மீன்பிடிக்க மட்டும் தடை விதிக்கப்பட்டிருப்பது மிகவும் வேதனையைத் தருகின்றது.

இது தொடர்பாகக் கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் அமைச்சர்கள், அரசியல் தலைவர்கள் மற்றும் அதிகாரிகளிடம் பலதடவைகள் எடுத்துக்கூறியும், மகஜர்களைக் கையளித்தும் எமக்கு எந்த விதமான பலனும் கிட்டவில்லை.

புதிய அரசு பதவியேற்றதும் நாம் பல எதிர்பார்ப்புக்களுடன் இருந்தோம்.

ஆனால் இதுவரை புதிய அரசும் எமக்கு சாதகமான பதிலைத் தரவில்லை.

இதனால் எதிர்வரும் புதன்கிழமை முதல் குடாநாட்டின் மீனவக் குடும்பங்கள் அனைத்தும் ஒன்றிணைந்து யாழ். செயலகம் முன்பாக மறியற்போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்திருக்கின்றோம்.

- என்று தெரிவித்தார். (ஐ-4-ரி)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 28 - 08 - 1919



மறைவு 29 - 12 - 2001

**அமரர் அம்பலவாணர் வீரவாகு**

(அராலி மத்தி)

30.12.2001ஆம் திகதிய மரணச்சடங்கிலும், இறுதிக்கிரியைகளிலும் கலந்துகொண்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிபுரிந்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ம.தயாளன்
(V.S.M.ஸ்ரோர்ஸ்)
கனகசபை வீதி, மானிப்பாய். (045)

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளை.


### யாழ்.இளைஞர் குறித்த ஆய்வுப்பட்டறை

யாழ்ப்பாணம்,ஜன.28

யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு 'யாழ்ப்பாண இளைஞர்களுக்கு இடையிலான முரண்பாடுகள் மற்றும் வறுமை ஒழிப்பு' தொடர்பான ஆய்வுப்பட்டறை நடைபெறுகிறது.

கலாநிதி மாக்கஸ் மேயர் மற்றும் கலாநிதி யூபி தங்கராசா ஆகியோர் கருத்துரையாற்றவுள்ள இந்த நிகழ்வில் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளும்படி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ஒ-6)

### திறப்பு விழா

யாழ்ப்பாணம்,ஜன.28

கொக்குவில் மேற்கு கலைமகள் சனசமூக நிலையத்தின திறப்புவிழா இன்று காலை 8 மணிக்கு இடம்பெறவுள்ளது.

ஓய்வுபெற்ற தபால் அதிபர் சி.ஜெகராஜசிங்கம் தலைமையில் இடம்பெறும் இந்தவிழாவில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச சபைத் தலைவர் க.மணிபல்லவராஜன் கலந்துகொள்வார்.

### அமைச்சர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படைப்பிரிவு தலைமையகத்தில் மாநாடு ஒன்றை நடத்தினர். மாவட்ட அரசாங்க அதிபர் சி.சண்முகம், கிழக்குப் பிராந்திய இராணுவத் தளபதி தென்னக் கோன், 233ஆவது படைப் பிரிவு கட்டளை அதிகாரி கேணல் அன்ரனிஸ், மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.கிருஷ்ணபிள்ளை, சமாதானக்குழுத் தலைவர் வண. பிதா மில்லர் அடிகளார் ஆகியோரும் கலந்துகொண்டார்.

அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிகள், திணைக்களத் தலைவர்கள் ஆகியோரிடம் மாவட்டத்தில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் பற்றி அமைச்சர் மிலிந்த மொறகொட கேட்டறிந்தார். (ஐ)

### புலிகள் மீது.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகள் இயக்கத் தடையை நீக்க வேண்டுமானால் அவர்கள் இரண்டு காரியங்களைச் செய்யவேண்டும். ஈழத்தைக் கைவிடுவதாக புலிகள் உலக நாடுகளிடம் முதலில் கூற வேண்டும். அடுத்ததாக வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம் இல்லை என்று அவர்கள் கூறவேண்டும்.

அவ்வாறு இல்லாமல் புலிகள் இயக்கத் தடை நீக்கப்படுவதை நான எதிர்க்கிறேன்.

- இவ்வாறு பெல்லன்வில விமல ரத்ன தேரர் பேட்டியில் கூறியிருக்கிறார். (ஐ)

### கூட்டமைப்பை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனை மேலும் பலப்படுத்துவது இன்றைய காலகட்டத்தில் ஓர் அவசியமான தேவை. இதனை நிறைவேற்றுவதற்கு துரிதமான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

☆ இவ்விதமான நடவடிக்கை இந்நடவடிக்கைக் குழுவினால் எடுக்கப்பட்டு, மேற்கூறப்பட்ட தீர்மானம் முழுமையாக நிறைவேற்றப்படும் வரை கூட்டமைப்பின் சார்பில் எவரும் தனிப்பட்ட முறையில் செயற்பட்டு எந்த நடவடிக்கை எடுப்பதும் பொருத்தமாக இருக்காது. அவ்வாறான நடவடிக்கைகளை தவிர்த்துக் கொள்ளவேண்டும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் அ.விநாயகமூர்த்தி, ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஸ்அணி) செயலாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன், ரெலோ அமைப்பின் முதல்வர் ந.ஸ்ரீகாந்தா ஆகியோர் கையெழுத்திட்டு வெளியிட்ட பத்திரிகைச் செய்திக் குறிப்பில் இத்தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. (ஒ)





ஓயாத ஷெல் வீச்சுகள் மற்றும் விமானத் தாக்குதல்களால் அழிவுண்ட கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தையும் கிளிநொச்சி மத்திய கல்லூரியையும் மேலே உள்ள படங்களில் காணலாம்.



ஆனையிறவு யுத்தத்தின்போது விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக் கப்பட்ட படையினரின் யுத்தடாங்கி ஒன்றின் எச்சங்களின் காட்சி. அண்மையில் அங்கு சென்ற செய்தியாளர்கள் எடுத்து வந்த படம் இது. (படம்:தமிழ் நெற்)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி கதிரவேலு இலட்சுமிப்பிள்ளை

மீசாலை கிழக்கு, அல்லாரை வீதியைச் சேர்ந்த திருமதி கதிரவேலு இலட்சுமிப்பிள்ளை நேற்று (27.01.2002) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் கதிரவேலு (கந்தராசா)வின் அன்பு மனைவியும் திருமதி சாந்த சில்வா உமையம்மை (லண்டன்), செல்வரத்தினம் (கனடா), குணரத்தினம் (லண்டன்), ஜீவரத்தினம் (சுவிஸ்), இராசரத்தினம் (சுவிஸ்), திருமதி புஸ்பகலாதேவி (ஐங்கரன் பாலர் பாடசாலை ஆசிரியை), மல்லிகாதேவி, கருணாகலாதேவி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற வீரகத்தி கணபதிப்பிள்ளை (இளைப்பாறிய காசாளர், ப.நோ.கூ.சங்கம் - சாவகச்சேரி), திருமதி தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், அன்னலட்சுமி (வசந்தி), சாந்தி, சத்தியலட்சுமி, ராதா, சாந்த சில்வா, தேவதாசன், மனோகரன், சிவகுமாரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், திரு.திருமதி துஷ்யந்தி ஆனந்தகுமார், சுபேந்திரன், சுகன்யா, பகீரதி, சிந்துஜன், சத்தியகௌரி, கீர்த்தனா, ஆராதனா, அபிராமி, கரிகரன், தாருஜா, கபிலன், லக்சியன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.01.2002) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது சொந்த இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பொற்புலவு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கதிரவேலு (கந்தராசா) (கணவர்)
*மீசாலை கிழக்கு, மீசாலை.* (039)

### திருமதி சண்முகராஜா இராசரத்தினம்

(தம்பிராஜா மிசி)

(ஓய்வுபெற்ற தாதி உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை, கைதடி அரசினர் ஆயுர்வேத வைத்தியசாலை)

புலோலி தெற்கு, தும்பளையைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் வடக்கு, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும்கொண்ட திருமதி சண்முகராஜா இராசரத்தினம் 27.01.2002 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சம்பந்தரின் பெறாமகளும் நளாயினியின் அன்புத் தாயாரும், பேரின்பராசனின் மாமியாரும் நிதர்சனன், லதுஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.01.2002) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சம்பந்தர் (சிறியதகப்பன்)
பேரின்பன்(மருமகன்)
*உதயசூரியன் அறிவகம் அருகில், ஏழாலை மேற்கு.* (044)

# அந்திமகால சேவைகளின் வருமானம் பெருக நோயாளிகளைக் கொன்ற மருத்துவக்குழு

## போலந்தில் தொடர்ந்த கொடூரம் அம்பலம்!

வார்சா,ஜன.28

போலந்தில் அந்திமகால சேவை நிறுவனங்களிடம் லஞ்சம் பெறும் 'அம்புலன்ஸ்' வாகன மருத்துவக் குழுக்கள் தாம் எடுத்துச்செல்லும் நோயாளிகளை வேண்டுமென்றே உயிரிழக்கச் செய்வதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதனால் போலந்து பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாகியுள்ளது.

லொட்ஜ் நகரத்தில் இத்தகைய குற்றங்கள் அதிகளவில் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது. மரணச்சடங்குகளை நடத்திக் கொடுக்கும் நிறுவனங்கள் கொடுக்கும் லஞ்சப் பணத்துக்கு ஆசைப்பட்டு, 'அம்புலன்ஸ்' வாகனங்களின் மருத்துவக் குழுக்கள் தாம் எடுத்துவரும் நோயாளிகளை இறக்கும்படி விடுவதாகவும் -

இதனை நிரூபிக்கும் வகையில் உறுதியான ஆதாரங்கள் தம்மிடம் உள்ளதாகவும் -

லொட்ஜ் நகர நிர்வாகத் தலைவர் தெரிவித்துள்ளார்.

கற்பனை செய்யக்கூட முடியாத இந்தச்செயல்களால் மிகவும் அதிர்ச்சியடைந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

அவசர மருத்துவ சேவைக்குழுக்கள் தசைகளை தளரச்செய்யும் 'பவ்லோன்' என்ற மருந்தைச் செலுத்தி நோயாளிகளின் மரணத்தை விரைவுபடுத்தியதாக உள்ளூர் ஊடகங்கள் தெரிவித்தன. இதனை லொட்ஜ் நகர பொலீஸார் உறுதிசெய்துள்ளனர்.

இந்தக் கொடுஞ்செயலில் ஈடுபட்டதாகக் கருதப்படும் சிலரை கைது செய்துள்ளதாகவும் -

அவர்கள் மீது விரைவில் வழக்குத் தொடரப்பட உள்ளதாகவும் -

பொலீஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

'லொட்ஜ்' நகர அம்புலன்ஸ் சேவைப்பிரிவினர் 'பவ்லோன்' என்ற மருந்தை அதிகளவில் உபயோகித்திருப்பது தெரியவந்ததைத் தொடர்ந்து நடத்தப்பட்ட விசாரணைகளிலேயே இந்த விவகாரம் வெளிவந்ததாக சுகாதார அமைச்சு தெரிவித்தது.

இதற்கிடையில், லொட்ஜ் நகர மருத்துவமனையின் அவசர சிகிச்சைப்பிரிவில் பணியாற்றும் மருத்துவர்கள் சிலரும் தம்மிடம் சிகிச்சை பெற்ற நோயாளிகளின் உயிர்களை - அந்திம சேவை நிறுவனங்களிடம் பணம் பெற்றுக்கொண்டு - போக்கியதாக முறைப்பாடுகள் எழுந்துள்ளன. இது தொடர்பாகவும் விசாரணை மேற்கொள்ளப்படுகிறது.

நோயாளிகளின் உயிர்களைப் போக்குவதில் சம்பந்தப்பட்டவர்களுக்கு அந்திமகால சேவை நிறுவனங்கள் தலா 300 டொலர்கள் வரை கொடுத்துள்ளன. தமது வருமானத்தைப் பெருக்குவதற்காகவே அந்தியகால சேவை நிறுவனங்கள் இந்தக் குறுக்கு வழியை நாடியுள்ளன. ஏற்கனவே நிதிப்பற்றாக்குறை மற்றும் நவீன உபகரணங்கள் இல்லாமை போன்ற காரணங்களால் போலந்தின் சுகாதார சேவை மோசமான நிலையை அடைந்துள்ள நிலையில் இந்த விடயம் அம்பலமாகி உள்ளது. சுகாதார சேவையில் நிலவும் பணப்பற்றாக் குறையைப் பயன்படுத்தி அந்திம சேவை நிறுவனங்கள் லஞ்சம் கொடுத்து தமது எண்ணத்தை நிறைவேற்றியுள்ளன என்று கூறப்படுகிறது. (ஓ)

## பலஸ்தீனத் தலைவர் அரபாத் அமெரிக்காவுக்கு எச்சரிக்கை!

ரமழா,ஜன.28

16மாதகாலமாக நிகழ்ந்துவரும் பலஸ்தீன எழுச்சியைக் கட்டுப்படுத்துவதில் அமெரிக்கா, இஸ்ரேலுக்கு சார்பாக நடந்துகொள்வதை நிறுத்த வேண்டும் என்று பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத் எச்சரித்துள்ளார்.



அமெரிக்க அதிபர் புஷ்ஷை சந்தித்த பின்னர் அரபாத் இவ்வாறு கூறினார்.

இஸ்ரேலுடனான உறவை அடிப்படையாகக் கொண்டு பலஸ்தீனப் பிரதேச நிலைமையை மதிப்பிடுவதை அமெரிக்கா நிறுத்திக்கொள்ள வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தினார்.

அதேசமயம், அமெரிக்க அமைதித் தூதர் அன்ரனி சினியை இந்தப் பிரதேசத்துக்கு மீண்டும் அனுப்பிவைக்கவேண்டும் என்றும் அரபாத் கேட்டுள்ளார். பலஸ்தீன மக்களுக்கு எதிராக இஸ்ரேல் யுத்த விமானங்களைப் பயன்படுத்துவது குறித்து சர்வதேச சமூகம் மௌனம் சாதிப்பது ஏன்? என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

இதற்கிடையில் இஸ்ரேலில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலையடுத்து மேற்குக்கரை மற்றும் காஸா பிரதேசங்களில் உள்ள பலஸ்தீன நிலைகள் மீது இஸ்ரேலிய விமானங்கள் குண்டு வீசித்தாக்கின.

## நடிகை ரோஜாவுக்கு ரூபா 4 லட்சம் அபராதம்

சென்னை,ஜன.28

வங்கிக் கணக்கில் பணமில்லாத போதும் வேண்டுமென்றே காசோலையைக் கொடுத்து ஒருவரை ஏமாற்றியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில் நடிகை ரோஜாவுக்கு ரூபா 4 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டது. அபராதத்தைச் செலுத்தத் தவறினால் ஓர் ஆண்டு சிறைத்தண்டனை அனுபவிக்கவேண்டுமென்றும் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

சில வருடங்களுக்கு முன்னர் தன்னிடம் கடனாகப் பெற்ற தொகையை காசோலை மூலம் ரோஜா திருப்பிச் செலுத்தியதாகவும்-

ஆனால் வங்கிக் கணக்கில் பணமில்லாததால் காசோலை திரும்பிவிட்டதாகவும் -

திரைப்படத் தயாரிப்பாளர் ஒருவர் தாக்கல் செய்த வழக்கிலேயே ரோஜாவுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (ஓ)

## 'ஆஸ்திரேலிய ஓபன்' சம்பியன்கள்

மெல்போன்,ஜன.28

மெல்போனில் நேற்று நடைபெற்ற 'ஆஸ்திரேலிய ஓபன்' டெனிஸ் போட்டியில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் சுவீடனின் தோமஸ் ஜொகான்சன் சம்பியன் பட்டம்வென்றார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மகளிர் ஒற்றையர் போட்டியில் அமெரிக்க வீராங்கனையான ஜெனிபர் கேப்ரியாட்டி சம்பியனானார்.

## ஆஸி. பிரதமர் குடியேற்ற விதியை தளர்த்த மறுப்பு

சிட்னி,ஜன.28

ஆஸ்திரேலியாவில் நடைமுறையில் உள்ள கடுமையான குடியேற்ற விதிகள் எவ்வித காரணத்துக்காகவும் தளர்த்தப்படமாட்டாது என்று ஆஸ்திரேலியப் பிரதமர் ஜோன ஹோவார்ட் தெரிவித்தார்.

தமக்கு குடியுரிமை அல்லது 'விஸா' வழங்கும்படி கோரி 'வூமேரா' அகதிகள் முகாமில் 200இற்கும் மேற்பட்டவர்கள் உண்ணாவிரதம் இருந்து வருவது தொடர்பாகவே அவர் இதனைத் தெரிவித்தார். (ஓ)

## 'லொக்கர் பீ' வழக்கில் மேன்முறையீடு

'லொக்கர் பீ' விமானக்குண்டு வெடிப்பு வழக்கில் தண்டனை விதிக்கப்பட்ட லிபியப் பிரஜையின் மேன்முறையீடு தொடர்பான விசாரணை நெதர்லாந்து நீதிமன்றத்தில் ஆரம்பமானது.

அயர்லாந்தின் 'லொக்கர் பீ' நகரின் மேலாகப் பறந்து கொண்டிருந்த அமெரிக்கப் பயணிகள் விமானம் ஒன்று வெடித்துச் சிதறியதில் இருநூறுக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர். இது தொடர்பாக ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட லிபியர் மேன்முறையீடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ)

## அதிக நாள்கள் உயிர்வாழும் 'சான்டினியா' தீவு மக்கள்

இத்தாலியின் மத்தியதரைக் கடல தவான சான்டினியாவில் வசிப்பவர்களே உலகில் அதிக காலம் உயிர்வாழும் மனிதர்கள் என்று ஆய்வு ஒன்றில் இனம் காணப்பட்டுள்ளனர்.

இங்கு வாழ்பவர்களில் 10 லட்சம் பேரில் 135பேர் நூறுவயதைத் தாண்டியவர்கள் என்றும் -

ஏனைய நாடுகளில் 10 இலட்சம் மக்களில் சுமார் 75 பேர் மட்டுமே நூறு வயதைத் தாண்டி உயிர் வாழ்வதாகவும் -

தெரிவிக்கப்பட்டது.

1997ஆம் ஆண்டின் இறுதியில் நூறு வயதை அடைந்துவிட்ட 272 பேர் சான்டினியா தீவில் இருந்தனர். உலகில் அதிக வயதுடையவர் என்று கருதப்பட்ட நபர் கடந்த மூன்றாம் திகதி தனது 113 ஆவது வயதை அடைவதற்கு 2வாரகாலம் இருந்தபோது காலமானார். அவர் இந்தத் தீவிலேயே தனது வாழ்நாள் முழுவதையும் கழித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சான்டினியாவில் அதிகநாள் மனிதர்கள் உயிர்வாழ்வதன் காரணம் தொடர்பாக தற்போது விஞ்ஞானிகள ஆய்வுகளை மேற்கொண்டுவருகின்றனர். (ஓ-4)

## இந்திய ஏவுகணைப் பரிசோதனை; உலக நாடுகள் பலவித கருத்துக்கள்

'அக்னி II பலஸ்டிக் ரக ஏவுகணையை இந்தியா இருநாள்களுக்கு முன்னர் வெற்றிகரமாகப் பரிசோதித்தது. இது தொடர்பாக உலக நாடுகள் பலவித கருத்துகளைத் தெரிவித்துள்ளன.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே பதற்றம் நிலவிவரும் இந்த வேளையில் இந்த ஏவுகணைச் சோதனையை இந்தியா தவிர்த்திருக்கலாம் என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின் பவல் தெரிவித்தார்.

பிராந்திய ஒருமைப்பாட்டிற்கு இந்தச் சோதனை அச்சுறுத்தலை ஏற்படுத்தியிருப்பதாக பாகிஸ்தான் கூறியுள்ளது.

முற்றிலும் வெளிப்படையாக நடந்துள்ளதால் 'அக்னி' ஏவுகணைப் பரிசோதனை சர்வதேச நம்பிக்கையூட்டும் நடவடிக்கை என்று ரஷ்யா தெரிவித்தது.

இந்தச் சோதனை எவருக்கும் எச்சரிக்கை விடுப்பதற்காக நடத்தப்படவில்லை என்று நம்புவதாக சீனா கூறியது.

'அக்னி' சோதித்துப் பார்க்கப்பட்டது உபகண்டப் பகுதியின் உள்ளேயும் வெளியேயும் தவறான அறிகுறிகளை உருவாக்கியுள்ளதாக பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் ஜக்ஸ்ரோ தெரிவித்தார். (ஓ)


### 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 02.12.1936

உதிர்வு 22.01.1997

**அமரர் செல்லர் ஆறுமுகதாஸ்**

*(ஓய்வுபெற்ற உபதபாலதிபர்)*

திதி: 28.01.2002

ஆண்டுகள் ஐந்தைக் கடந்தாலும் உம் நினைவு எம்மைவிட்டு அகலாது.

*உமது ஆத்மசாந்திக்காக*

*இணுவை பரராஜசேகர விநாயகனைத் துதிக்கும்*

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

*இணுவில்.* (016)

### 7 ஆம் ஆண்டு நினைவு நாள்



படைப்பில் 16 - 01 - 1943

பறிப்பில் 16 - 01 - 1995

**அமரர் பொன்னம்பலம் தில்லைநாதன்**

*(பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன ஊழியர்).*

திதி: 28.01.2002

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே! பாசதீபமே!!
உங்கள் வாழ்வின் இலட்சியமும் உழைப்பும்தான்
எங்கள் இன்றைய வாழ்வின் ஏணிப்படி!
நாங்கள் என்றும் உங்கள் இலட்சியத்தை அடைவதற்கும்
உங்கள் ஆத்மசாந்திக்கும் இறைவனை வேண்டுகிறோம்.

*கல்வயல், சாவகச்சேரி.* (015) - குடும்பத்தினர்.

புனரமைக்கப்பட்ட

**அராலி மேற்கு சனசமூக நிலைய**

### திறப்பு விழா

*இடம்* :- அராலி மேற்கு சனசமூக நிலையம்

*காலம்* :- இன்று (28.01.2002) திங்கட்கிழமை காலை 10.00 மணி (புதிய நேரம்)

*தலைவர்* :- திரு.சு.விஜேந்திரன் அவர்கள்
*(தலைவர், அராலி மேற்கு சனசமூக நிலையம்)*

★ பிரதம விருந்தினர்கள் ★

திரு. வே.மகேந்திரன் அவர்கள்
*(உப தலைவர், வலி.மேற்கு பிரதேச சபை)*

திருமதி கே.சிவசோதி அவர்கள்
*(சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர்)*

திரு. ஆர்.ஸ்ரீரஞ்சன் அவர்கள்
*(கிராம சேவையாளர், அராலி மத்தி)*

திரு. க.தில்லைநடராஜா அவர்கள்
*(கிராம சேவையாளர், அராலி மேற்கு)*

★ சிறப்பு விருந்தினர்கள் ★

திரு. தா.தியாகமூர்த்தி அவர்கள்
*(கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், வலி.மேற்கு பிரதேச செயலகம்)*

திரு. எஸ்.வரதராஜா அவர்கள்
*(தொழில்நுட்ப உத்தியோகத்தர், வலி.மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்)*

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

*அராலி மேற்கு,*
*வட்டுக்கோட்டை.* (03) *- சனசமூக நிலையத்தினர்.*

உ

**JOLEY RESTAURANT**

முதலாம் ஆண்டு நிறைவைக் கண்டு மகிழும்
ஜொலி ரெஸ்ரோரன்ஸ் ஸ்தாபனத்தினர்

தமது அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் அளவிலா மகிழ்ச்சி அடைகின்றனர்.

எம்மிடம் —> தரம், மணம், குணம் நிறைந்த ருசிமிக்க

▶(f)வ்றைற் றைஸ் ▶ புரியாணி ▶ நூடில்ஸ்

மற்றும் சுவையான பல்வேறு உணவு வகைகளும் ஓடர்செய்து பெற்றுக்கொள்ளலாம்

சுத்தமும் சுகாதாரமும் பேணுகின்ற ஒரே ஸ்தாபனம்:

★ ஜொலி ரெஸ்ரோரன்ஸ் ★

பலாலி வீதி,
திருநெல்வேலி.

உரிமையாளர்: திரு. வ. பஞ்சநாதன்

(032)



சிவமயம்
ஓம் பிள்ளையார் துணை
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

**மங்களகரமான புதுக்கடைத் திறப்பு விழா**

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விஷு வருடம் தை மாதம் 15 ஆம் நாள் இன்று (28-01-2002) திங்கட்கிழமை மதியம் 12.14 மணி முதல் 1.05 மணிவரை உள்ள சுபமுகூர்த்த வேளையில்

எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள

**சினோ நகை மாடம்**

என்னும் ஸ்தாபனத்தை ஆரம்பித்து நடத்தவிருப்பதால் தாங்களும் வருகை தந்து ஆசிர்வதிக்குமாறு அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:
ரெ. தில்லையம்பலம் (ராஜி)
(உரிமையாளர்).

224, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (025)



மங்களகரமான

**புதுக்கடைத் திறப்பு விழா**

நிகழும் விஷு வருடம் இன்று [28-01-2002] தைத்திங்கட்கிழமை காலை 11.45 தொடக்கம் 12.10 வரையுள்ள கும்பலக்கின சுபவேளையில்

**கோலம்ஸ் சில்க்ஸ்**

எனும் நிறுவனத்தை ஆரம்பிக்க உள்ளதால் அத்தருணம் குடும்ப சகிதம் வருகை தருமாறு அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**GOLAMS SILKIS**

கிளை:- 166, நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.

பிரதான வீதி,
சங்கானை.

தங்கள் நல்வரவை நாடும்:
சங்கானை கோலம்ஸ் சில்க்ஸ்
உரிமையாளரின் மகன் செ. சுகுணன் [024]



உ
சிவமயம்

**பூப்புப்புனித நன்னீராட்டு விழா அழைப்பு**

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான விஷு வருடம் தைத்திங்கள் 15 ஆம் நாள் இன்று ( 2002–01–28 ) திங்கட்கிழமை காலை 9.15 மணி முதல் 10.15 மணி வரையுள்ள பூச நட்சத்திரமும் மீனலக்கினமும் அமிர்தசித்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த நல்வேளையில்

எமது சிரேஷ்ட புத்திரி
திருநிறைசெல்வி

**ஜெனுபா [ஜெனி]**

அவர்களுக்கு

எமது இல்லத்தில் பூப்புப்புனித நன்னீராட்டுவிழா நடத்தத்திருவருள் துணையுடன் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து செல்வியை ஆசிர்வதித்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:
திரு. குணசீலன், திருமதி பிறேமலதா தம்பதிகள்.

67, ஆசீர்வாதப்பர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (027)


வடமராட்சிக் கல்வி வலய

# ஆசிரிய பயிற்சி நிலையத்துக்கு முகாமையாளர் தேவை!

வடமராட்சிக் கல்வி வலய ஆசிரியர் பயிற்சி நிலையத்துக்கு முகாமையாளர்களை நியமனம் செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றிருத்தலுடன், பட்டப்பின் டிப்ளோமா பயிற்சி பெற்றவராகவும், பட்டதாரியாக 5 வருடங்களுக்குக் குறையாத ஆசிரிய சேவைக் காலத்தை உடையவராகவும் விண்ணப்பதாரி இருக்க வேண்டும்.

விண்ணப்பங்கள் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும் —

கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி. அருளானந்தம் அறிவித்துள்ளார்.

(ம-1-178)

## கோப்பாயில் அறநெறிப் பாடசாலை

கோப்பாய், ஜன. 28

கோப்பாய் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோவில் அறநெறிப் பாடசாலை வகுப்புகள் இன்று தைப்பூச திருநாளன்று காலை 9.30 மணிக்கு வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்படுகிறது.

இவ்வகுப்பில் ஆண்டு 1 முதல் 5 வரையான மாணவர்களுக்கு சமயநன்னெறி பழக்க வழக்கங்கள் கற்பிக்கப்படவுள்ளன. இப்பாடசாலை கடந்த 2000 யூன் மாதம் இடப்பெயர்வு அனர்த்தம் ஏற்படும் வரை இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

(ம-72)

## தைப்பூசத் திருவிழா

அச்சுவேலி, ஜன. 28

அச்சுவேலி நாவலம்பதி காட்டுமலைக்கந்தசாமி கோயிலில் தைப்பூசத் திருவிழா இன்று விசேட உற்சவமாக நடைபெறவுள்ளது. முருகப்பெருமான் திருமஞ்சத்தில் வீதி உலா வருவதுடன் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட 'சிவசோதி' அன்ன சத்திர திறப்புவிழாவும் நாளை நடைபெறவுள்ளது.

(ம-11)

★ ✳ ★

யாழ்ப்பாணம், ஜன. 28

புங்குடுதீவு கிழக்கு அருள்மிகு ஸ்ரீ கண்ணகை அம்மன் என வழங்கும் இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிமுதல் தைப்பூசவிழா நடைபெறவுள்ளது.

விசேட அபிஷேகம், வசந்த மண்டபப்பூசை, சுமங்கலிப் பூசை ஆகியவற்றைத் தொடர்ந்து அம்பாள் வீதி உலா வருதல் இடம்பெறும்.

(ம-7)


சற்குரு தியாகராஜர் உற்சவ

**155 ஆவது இசை ஆராதனை**

இடம்:- இராமநாதன் நுண்கலைத்துறை அறிமுறை மண்டபம்.
காலம்:- நாளை 29.1.2002 (செவ்வாய்க்கிழமை)
நேரம்:- காலை 8.30 மணி

இந்த இசை ஆராதனை நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கவின்கலைமன்றம்,
இராமநாதன் நுண்கலைத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

[034[


# மரண அறிவித்தல்கள்

## திருமதி விசுவலிங்கம அன்னப்பிள்ளை

நயினாதீவு 8 ஆம்வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி விசுவலிங்கம் அன்னப்பிள்ளை அவர்கள் நேற்று (27-01-02) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விசுவலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், செல்வராசா, செல்வராணி, லெட்சுமி, கந்தசாமி, சின்னமணி, மங்களேஸ்வரி, பரமேஸ்வரி, கமலாம்பிகை, தில்லைநாயகி ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28-01-2002) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சல்விபாலை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
செ. அம்பிகைதாசன்
(பேரன்)

ஆச்சிகடை,
நயினாதீவு–07

(029)

## செல்வி விஜயந்தி பேரின்பநாயகம்

நல்லூரைச் சேர்ந்த, கொழும்பில் வதியும் ஓய்வு பெற்ற பொலீஸ் உதவி அத்தியட்சகர் (DIG) திரு. T. பேரின்பநாயகம் அவர்களின் மூத்த புதல்வி செல்வி விஜயந்தி நேற்று (27.01.2002) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் இறைபதம் அடைந்தார் என்பதை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் துயரத்துடன் அறியத்தருகிறேன்.

தகவல்:
புஷ்பா செல்வநாயகம்
(மாமி)

No. 1 Alexandra Terface
Colombo - 06

(036)

உதயன்

## பிரதமர் எதிர்நோக்கும் சவால்

விடுதலைப் புலிகள் அமைப்பு மீதான தடையை நீக்கக்கூடாது. சமாதானப் பேச்சுக்காகப் புலிகள் இயக்கம் சமர்ப்பித்திருக்கும் தாயகக் கோட்பாடு முன்நிபந்தனையை ஏற்கக்கூடாது. வடக்கு - கிழக்கில் தொடர்ந்தும் குடியேற்றங்களை முன்னெடுக்கவேண்டும்.

இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் வற்புறுத்திக் கேட்டிருக்கிறார் தென்னிலங்கையின் கடும்போக்கு பௌத்த துறவியான அமரபுர சங்க சபாவின் மகாநாயக்கர் மடிகே பஞ்ஞாசீஹ தேரர். தன்னைச் சந்தித்து ஆசிபெற வந்த பிரதமரிடமே அவர் இந்த விடயங்களை வலியுறுத்திக் கூறியிருக்கிறார்.

வடக்கு - கிழக்கு தாயகக் கோட்பாட்டை அரசு ஏற்றுக்கொள்ளாது. வடக்கு - கிழக்கில் சிங்களவர்களும், தமிழர்களும், முஸ்லிம்களும் வசிக்கின்றனர் என்பதே எமது நிலைப்பாடு. இந்திய - இலங்கை உடன்படிக்கையில் கூட இந்த விடயமே உள்ளடக்கப்பட்டிருக்கிறது. எனவே தாயகக் கோட்பாடு ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. நாங்கள் எப்போதும் இதுவிடயத்தில் எமது நிலைப்பாட்டைத் தெளிவாக வெளிப்படுத்தி வந்திருக்கிறோம் - இவ்வாறு மகாநாயக்க தேரருக்கு பதிலளித்திருக்கிறார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

இதேவேளை -

தென்னிலங்கையைச் சேர்ந்த சிங்கள கடும்போக்கு அமைப்புகளை ஒன்றுதிரட்டி விடுதலைப் புலிகள் அமைப்புமீதான தடையை நீக்குவதைத் தீவிரமாக எதிர்ப்பதற்காக எதிரணியைச் சேர்ந்த சில கட்சிகள் நாளை கூட்டம் ஒன்றை நடத்த இருப்பதாகவும் தகவல்கள் வெளிவந்துள்ளன.

தற்போதைய நெருக்கடியான நிலைமை கருதி எல்லாத் தேசியக் கட்சிகளையும், அமைப்புகளையும் ஒரே அணியில் திரட்டி எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க ஜே.வி.பியும், மக்கள் ஐக்கிய முன்னணியும் தமக்குள் இணக்கம் கண்டிருப்பதாகவும் தகவல்கள் கசிந்துள்ளன.

நாட்டில் நிரந்தர சமாதானத்துக்கான நம்பிக்கை ஒளிக்கீற்றுக்கள் தென்படுகின்ற இன்றைய சூழ்நிலையில் மகா சங்கத்தினரும், இனவாத அடிப்படையைக் கொண்ட தென்னிலங்கைக் கட்சிகளும் எடுத்திருக்கும் இந்த நிலைப்பாடு பெரும் ஏமாற்றமளிப்பதாய் உள்ளது.

சமாதானத்துக்கான இறுதிச் சந்தர்ப்பத்தை இழக்காமல் இருப்பதற்காக விடுதலைப் புலிகள் அமைப்பு மீது உள்நாட்டில் விதிக்கப்பட்டிருக்கும் தடையை நீக்குவது குறித்து அரசு பரிசீலிக்கும் என்று தனது கொள்கை விளக்க உரையில் பிரதமர் ரணில் வக்கிரமசிங்க கூறியதை அடுத்து தென இலங்கையில் இருந்து தடை நீக்கத்திற்கு எதிரான - சமாதான முயற்சிகளைக் குழப்பிவிடக்கூடிய - குரல்கள ஒலிக்கத்தொடங்கயுள்ளன.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடிக்கவேண்டும் என்று மகா சங்கத்தினர் விடாப்பிடியாக - ஒரே பிடிவாதமாக - கூறிவந்திருக்கின்றனர். அரசியலில் மிகுந்த செல்வாக்குச் செலுத்தும் அவர்களது இந்த நிலைப்பாடு கடந்த காலங்களில் பலதடவைகள் சமாதானத்துக்குக் கிடைத்த வாய்ப்புக்களை எட்டாக் கனியாக்கின என்பது வரலாறு.

தற்போது - புதிய அரசு பதவிக்கு வந்த பிறகு - முன்னெப்போதும் இல்லாதவகையில் நிலையான சமாதானம பற்றிய நம்பிக்கைகள் பிறந்துள்ளன. ஆயினும் சமாதானத்துக்கான பாதையில் இன்னமும் ஒருசில அடிகள்கூட எடுத்து வைக்கப்படவில்லை.

இருதரப்பு சமாதானப் பேச்சுக்கான கால்கோள் மட்டுமே தற்போது இடப்பட்டிருக்கிறது.

இந்தக்கட்டத்தில் -

பொறுப்புவாய்ந்த மகாநாயக்கர்கள் பொறுப்பற்ற வகையில் நல்லெண்ணத்தைச் சிதறடிக்கும் கருத்துக்களை வெளியிடத் தொடங்கியிருப்பது மீண்டும் இருண்டயுகம் ஒன்றுக்குள் நாட்டைத் தள்ளிவிடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்துகிறது.

சமாதானத்தை ஏற்படுத்த இதய சுத்தியுடன் செயலாற்ற திடசங்கற்பம் பூண்டுள்ள பிரதமர் வீக்கிரமசிங்கமுன் சவால்கள் முகம்காட்டத் தொடங்கியுள்ளன.

இந்தச் சவால்களைச் சமாளித்து சமாதான முயற்சிகளைச் சரியான வழியில் நகர்த்த அவரால் முடியுமா என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

# எம்மை நண்பர்களாக நடத்தினார்கள் புலிகள்

## விடுவிக்கப்பட்ட கைதி ஒருவர் கூறுகிறார்

கொழும்பு,ஜன.28

விடுதலைப் புலிகள் எம்மைப் போர்க் கைதிகள் போலல்லாமல் நண்பர்களாகவே நடத்தினார்கள்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் அண்மையில் புலிகளால் விடுவிக்கப்பட்ட போர்க்கைதி ஒருவர். எம்.தர்மப்பிரியபண்டா (வயது 27) என்ற இந்தக் கைதி, 'குட்வில் மொராயன்' கம்பனிக்குச் சொந்தமான கப்பலில் பணியாற்றியபோது புலிகளால் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வன்னியில் வாழும் மக்கள் ஒரு வேளை உணவுக்காகக் கஷ்டப்படுகின்றனர்.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளும்கூட உணவுத் தட்டுப்பாடு நிலவும் சமயங்களில் ஒருநேரம் மட்டுமே சாப்பிட்டுச் சமாளிக்கின்றனர்.

ஆனால் எங்களுக்கு எந்தவிதமான குறைபாடுகளும் இன்றி மூன்று வேளை உணவு வழங்கினார்கள். சகல பொழுதுபோக்கு வசதிகளும் ஏற்படுத்தித்தந்தார்கள். எங்களை அவர்கள் போர்க்கைதிகள் போன்று அல்லாமல் நண்பர்களாகவும் உறவினர்களாகவும் நடத்தினார்கள்.

- இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (ம)

# நாட்டு நடப்பு

**யாழ் நகர்க் காட்சி - 5**

அழகுறு தமிழர் தங்கள்
அரிய தலை நகரதனை
இழிந்த குப்பை கூளம் எல்லாம்
இப்படி சிதைத்து விட்டால்
பழியெலாம் எம்மை சேர
பார்ப்பவர் பரிகசிப்பர் அன்றோ
துளியேனும் ரோசம் உண்டேல்
துணிந்து இத்துயரைப் போக்கு.

*- விகடகவி.*

### மெய்வன்மை போட்டி

சமரபாகு நியூட்டன் சனசமூக நிலையத்தினரால் நடத்தப்படும் 28 ஆவது இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று திங்கட்கிழமை தைப்பூசத்தன்று பிற்பகல் ஒரு மணிக்கு நியூட்டன் சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது. (ம-31)

★ ★ ★

இளவாலை மாரீசன்கூடல் றோ.க.த.க. பாடசாலையின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பாடசாலை அதிபர் எஸ்.என். உதயகுமார் தலைமையில் ஆரம்பமாகும்.

இவ்விளையாட்டுப் போட்டிக்கு பிரதமவிருந்தினராக வலிகாமம் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஆர்.இருதயநாதனும் சிறப்பு விருந்தினராக பண்டத்தரிப்பு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.இராஜதுரையும் கலந்துகொள்வர். (ம-8)

## சாவகச்சேரிப் பகுதியில்

# கடைகள் சேதமுற்ற வர்த்தகர்களில் 160 பேருக்கு வங்கி மூலம் கடன்

## சிபார்சுப் பட்டியல் கிடைத்தது

யாழ்ப்பாணம்,ஜன.28

போர் அனர்த்தங்களினால் சாவகச்சேரிப் பகுதியில் சேதமுற்ற வர்த்தக நிலையக் கட்டடங்களைப் புனரமைப்புச் செய்யவென புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சு இலங்கை வங்கி மூலம் கடன் வசதிகளை வழங்கவுள்ளது.

இதன் அடிப்படையில் முதற்கட்டமாக சாவகச்சேரிப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையக் கட்டடங்கள் சேதமுற்ற வர்த்தகர்கள் 160 பேருக்கு கடன்களை இலங்கை வங்கிமூலம் வழங்க அமைச்சு சிபார்சு செய்து பட்டியல் ஒன்றினை சாவகச்சேரி இலங்கை வங்கிக் கிளைக்கு அனுப்பிவைத்துள்ளதாக வங்கியின் உயர்அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தக் கடன்கள் 50 ஆயிரம் ரூபா தொடக்கம் 5 லட்சம் ரூபா வரை வர்த்தக ஸ்தாபனத்தின் பாதிப்புக்கேற்ப வழங்கப்படும்.

கடன்பெற விண்ணப்பித்த ஏனைய வர்த்தகர்களில் கடன்வழங்க சிபார்சு செய்யப்பட்டோரின் மற்றொரு பட்டியல் விரைவில் கிடைக்குமெனவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (ஐ-180)

# அமைச்சர்கள், எம்.பிக்களின் பாதுகாப்பு; பொலீஸாரே ஈடுபடுத்தப்படவேண்டும்!

## பிரதமர் கண்டிப்பான உத்தரவு

கொழும்பு,ஜன.28

அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது பாதுகாப்புப் பணியில் பொலீஸாரையே ஈடுபடுத்தவேண்டும். எக்காரணம் கொண்டும் இராணுவத்தினரையோ, இராணுவப் பயிற்சி பெற்றவர்களையோ அமர்த்தக்கூடாது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கண்டிப்பான உத்தரவைவிடுத்துள்ளார்.

அரச நாடாளுமன்றக் குழுக் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றக கட்டடத் தொகுதியில் நடந்த சமயமே அவர் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

கண்டி மடவளையில் 10 முஸ்லிம் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் -

அத்துருகிரியவில் ஆயுதங்கள் மீட்கப்பட்ட சம்பவம் -

தலாதாமாளிகை அதிகாரிகளுக்கு கொலை அச்சுறுத்தல் விடுககப்பட்ட சம்பவம் -

ஆகியவற்றில் அரசியல்வாதிகளின் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்ட இராணுவத்தினரே சம்பந்தப்பட்டுள்ளனர் என்று பிரதமர் அங்கு தெரிவித்தார்.

எதிர்காலத்தில் அமைச்சர்களோ, நாடாளுமன்ற உறுப்பினர்களோ பொலீஸ் பாதுகாப்பை மட்டுமே பெற வேண்டும். அதுவும் எந்தப் பகுதியில் அவர்கள் தங்கியிருக்கிறார்களோ அந்தப் பிரதேச பொலீஸ் அதிகாரியுடன் தொடர்பு கொண்டே பொலீஸ் பாதுகாப்பைப் பெறவேண்டும் என்று பிரதமர் மேலும் அறிவுறுத்தியுள்ளார்.(ம-3)

### அடிக்கல் நடும் விழா

யாழ்ப்பாணம்,ஜன.28

சுன்னாகம் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ சொர்ணவரத காளிஅம்பாள் ஆலயத்துக்கான அடிக்கல் நடும் விழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணிமுதல் நடைபெறவுள்ளது.(ம-7)

## சம்பளக் கொடுப்பனவு நிறுத்தப்பட்டதை எதிர்த்து

# லங்கா சிமெந்து நிறுவன ஊழியர்கள் நாளைமுதல் தொழிற்சங்கப் போராட்டம்

காங்கேசன்துறை லங்கா சிமெந்து நிறுவனத்தைச் சேர்ந்த 159 ஊழியர்கள் இடைநிறுத்தப்பட்ட தமது சம்பளக் கொடுப்பனவை உடனடியாக வழங்குமாறுகோரி நாளை செவ்வாய்க்கிழமைமுதல் தொழிற்சங்கப் போராட்டத்தில் இறங்கப்போவதாக அறிவித்துள்ளனர்.

அவர்களுக்கு இம்மாதம்முதல் சம்பளக் கொடுப்பனவு வழங்கப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டதை அடுத்தே அவர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

சம்பளக் கொடுப்பனவு நிறுத்தப்பட்டது குறித்து கடந்த வெள்ளிக்கிழமை அறிவிக்கப்பட்டதும் ஊழியர்கள் யாழ்.கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள காங்கேசன்துறை லங்கா சிமெந்து நிறுவனத்தின் தற்காலிக அலுவலகத்தைவிட்டு வெளிநடப்புச் செய்திருந்தனர்.

லங்கா சிமெந்து நிறுவனத்தைச் சேர்ந்த ஊழியர்களுக்கு கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் தொடர்ச்சியாக சம்பளம் வழங்கப்பட்டு வந்தது என்றும் -

புதிய அரசு பதவியேற்றதைத் தொடர்ந்து அங்கு கடமையாற்றும் 224 பேரில் 159 ஊழியர்களுக்கு காரணம் எதுவும் கூறப்படாது சம்பளம் வழங்கப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் -

ஊழியர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. ம-7-180)

### நாளை

தை 16
செவ்வாய்க்கிழமை
(29-01-2002)
திதி : பிரதமை
பின்னிரவு 2.03 வரை.
நட்சத்திரம்:ஆயிலியம் முழுவதும்
பூசம் காலை 8.00வரை
சுபநேரம் : 11.06 - 12.36
ராகுகாலம் : 3.36 - 5.06
(பழைய நேரப்படி)

### பொருட்காட்சி

யாழ்பிரதேச செயலர் பிரிவு மாதர் அபிவிருத்தி நிலையத்தின் தையல் மனையியல் பொருட்காட்சி இன்று திங்கட்கிழமை காலை 10.30 மணி முதல் யாழ்ப்பாணம் மாதர் அபிவிருத்தி நிலையத்தில் யாழ்.பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜீ.ரி.ஞானசேகரவேல் தலைமையில் இடம்பெறும். (ம-100)

### உதயவாக்கு

எவன் ஒருவன் புகழை வெறுக்கிறானோ, அவனுக்கு உண்மையான புகழ் தானாக வந்தடையும்

## காணாமற்போனோர் விசாரணை

# 14 கிராம அலுவலர்களுக்கு பொலீஸார் அழைப்பு விடுப்பு

வடபகுதியில் காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை நடத்தி வரும் குற்றவியல் திணைக்களத்தின் பொலீஸ் அதிகாரிகள் குழுவினர் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 14 கிராம அலுவலர்களின் வாக்குமூலங்களைப் பதிவு செய்யவுள்ளனர்.

வாக்குமூலம் பெறப்படவுள்ள கிராம அலுவலர்களை எதிர்வரும் 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.பொலீஸ் நிலையத்திற்கு வருகை தருமாறு பொலீஸார் அழைத்துள்ளனர்.

அழைக்கப்பட்டுள்ள கிராம அலுவலர்களின் கடமைப் பிரிவு பற்றிய விவரம் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக வருமாறு:-

**சாவகச்சேரி**

நாவற்குழி வடக்கு, தனங்களப்பு, கைதடி நுணாவில் (ஜே/309), மீசாலை கிழக்கு, (ஜே/319, ஜே/289)

**யாழ்ப்பாணம்**

மத்தியூஸ் வீதி கிராம அலுவலர், 2ஆம் குறுக்குத்தெரு, கொழும்புத்துறை. (ஜே/68)

**பளை**

பி/79 (சோரன்பற்று)

**கரவெட்டி**

ஜே/356

**கோப்பாய்**

செல்வநாயகபுரம் (அச்சுவேலி)

**சண்டிலிப்பாய்**

தும்பளை, அளவெட்டி கிழக்கு

மேற்குறிப்பிடப்பட்ட கிராம அலுவலர்களைத் தவறாது குறித்த தினத்தில் யாழ்.பொலீஸ் நிலையத்தில் ஒன்றுகூடுமாறு யாழ். அரசாங்க அதிபர் கேட்டுள்ளார். (ம-7)

# தேர்தல் காலக் கொடுப்பனவு இல்லை

கடந்த பொதுத் தேர்தலின்போது கடமையாற்றிய கல்வி வலயங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு இதுவரை தேர்தல் கடமைக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை. இதே வேளை - மார்ச் மாதம் நடைபெற விருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கடமையாற்றவுள்ள உத்தியோகத்தர்களின் விபரங்களை அனுப்பிவைக்குமாறு யாழ்.தேர்தல் திணைக்களத்தினால் பாடசாலை அதிபர்களுக்குப் படிவங்கள் அனுப்பப்பட்டுள்ளன.(ம-117)




உ

மங்களகரமான

புதுக்கடைத் திறப்புவிழா அழைப்பு



அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விஷு வருடம் இன்று தைத் திங்கள் 15ஆம் நாள் (28-01-2002) திங்கட்கிழமை முற்பகல் 11.40 முதல் நண்பகல் 12.25 வரையுள்ள பூரணைத் திதியும் பூச நட்சத்திரமும் கூடிய சித்த சுபவேளையில்

எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள



ஸ்ரீ முருகன் ஜுவல்லர்ஸ்



என்னும் ஸ்தாபனத்தை திறந்துவைக்க இறை அருள் கைகூடியுள்ளது. இந்நிகழ்வில் எமது நண்பர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள், வியாபாரிகள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் தங்கள் குடும்பத்தினருடன் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:
திரு.க.மணிவண்ணனும்
பாரியாரும்.

115, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(97559)


## அமுதசுரபியும் பாராட்டுகிறாள்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பிகையின் உயர்திருவிழாக் காலங்களிலும், தைப்பூசம், ஆடிப்பூர உற்சவகாலங்களிலும் வரும் பல்லாயிரக்கணக்கான அடியார்களின் அரும்பசி தீர்க்கும் அமுதசுரபி அன்னதான சபையினரின் புதிய மண்டப நிர்மாண வேலைக்காக ஒரு மில்லியன் ரூபாவை அன்பளிப்பாக உதவிக்கரம் நீட்டிய,



முன்னாள் வடக்கு புனர்வாழ்வு - புனரமைப்பு,
அபிவிருத்தி, இந்து சமய விவகார,
தமிழ்மொழி அமுலாக்கல் அமைச்சரும்,
தற்போதைய யாழ்.மாவட்ட நா.உறுப்பினராகிய

**திருவாளர் டக்ளஸ் தேவானந்தா**

அவர்களுக்கும் -



முன்னாள் யாழ்.மாவட்ட
நாடாளுமன்ற உறுப்பினர்

**திருவாளர் கே.வி. ஜெகன்**

அவர்களுக்கும் -



நல்லூர் பிரதேச சபைத் தலைவரும்
நயினையின் மைந்தருமான

**திருவாளர் க.மணிபல்லவராஜன் J.P.U.M.**

அவர்களுக்கும் -



வேலணை பிரதேச சபைத் தலைவரும்
நயினையின் மைந்தருமான

**திருவாளர்**
**ந.கருணாகரகுருமூர்த்தி J.P.U.M.**

அவர்களுக்கும் -

மேற்படி புனித திருப்பணி நிறைவேற நிதியுதவிகளையும் ஏனைய உதவிகளையும் வழங்கிய பெரியார்கள், தர்ம கொடைவள்ளல்கள் அனைவரையும் தைப்பூச நன்னாளில் நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
அனைவருக்கும் அம்பிகையின் அருளாசி கிடைக்கப் பிரார்த்திக்கிறோம்.

நிர்வாகம்,
அமுதசுரபி.

நயினாதீவு - 2

(C/20428)


எங்கள் வீட்டின் - எங்கள் குடும்பத்தின் - எங்கள் பயணத்துக்கு பஜாஜ் ஒன்றுதான்





பஜாஜ் - எனது நண்பன்



பஜாஜ் - எனது கைஉதவியாளன்

**வீட்டில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான பயணங்கள் உண்டு.**
அந்த போக்கு வரத்துக்காக வீணாகும் செலவையும், நேரத்தையும், களைப்பையும் குறைப்பதற்கும், அந்த செலவழியும் பணத்தையும் காலத்தையும் சேமித்து அதை எங்களின் குடும்ப முன்னேற்றத்துக்காக பயன்படுத்த எங்களின் பஜாஜ் வண்டியினால்தான் உதவ முடிந்தது.



பஜாஜ் - எனது மூத்தவன்

பஜாஜ் முச்சக்கர வண்டி அன்றுபோல் இன்றும், இன்றுபோல் நாளையும் எங்களின் முன்னேற்றத்துக்கு கைகொடுத்து உதவ எங்களுடன் தொடர்ந்து இயங்கும் என்பது எங்களின் விசுவாசம்.



பஜாஜ் - எனது காவலன்

விலை ரூ. 187,350/-ல் இருந்து மேல் (GST உட்பட)


**டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்**
த. பெ. 1909, 75, ஹைட்பார்க் கோனர், கொழும்பு 02. தொ. பே: 074-700600, 687167, 687169, பக்ஸ்: 687175

பிரதேச கிளை அலுவலகங்கள்:
■ 1743,கட்டுகஸ்தோட்டைவீதி, கண்டி. தொ. பே: 08-226146, 08-238133-5 ■ 27 E, வியாபார ஸ்தானம், தெகியத்தகண்டிய. தொ. பே: 027 50037 ■ 382, அனகாரிக்க தர்மபால மாவத்தை, தொ. பே: 041-27488, 041-28488, 041-28999
■ நீதல் மாவத்தை, அம்பாறை. தொ. பே: 063-22997, 063-23662 ■ 96, மைத்திரிபால சேனாநாயக்க மாவத்தை, அநுராதபுரம். தொ. பே. 025-22676 ■ தனசிறி கட்டிடம், இல. 195, பிரதான வீதி, இரத்தினபுரி. தொலைபேசி: 045-22389


இலவசம்!
ஒவ்வொரு திடமான பதிவுக்கும்
பஜாஜ் முச்சக்கர வண்டி
ஒரு சோடி பக்கத் திரைகளுடன் ஒரு லீட்டர் சர்வோ என்ஜின் எண்ணை கான் ஒன்றும்
இக்கொடுப்பனவு 2002 ஜனவரி 7 முதல் 31 வரை

மேல் விபரங்களுக்கு இக்கூப்பனை நிரப்பி கீள் குறிப்பிட்ட விலாசத்துக்கு தபாலில் அனுப்பி வையுங்கள்.
பெயர்.................................
விலாசம்.................................
சேவை நிலையம்.................................தொலை பேசி.................
பஜாஜ் முச்சக்கர வண்டி பற்றிய மேல் விபரங்களை அனுப்பி வையுங்கள்.

Tradlanka




# நூறு நாள் புரட்சியின் 25வது நாளில்...




**நாம் உங்களுக்கு வாக்குறுதி அளித்ததுபோல் 100 நாள் சமூக, பொருளாதார துரித அபிவிருத்தித் திட்டத்தின், முதல் 25 நாட்களில் நாம் மேற்கொண்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றிய அறிக்கையை இங்கே மக்களுக்கு சமர்ப்பிக்கின்றோம்.**

**தயவு செய்து உங்கள் கருத்துக்களை எமக்குத் தெரியப்படுத்துங்கள்: கொள்கை அபிவிருத்தி, செயற்படுத்துகை அமைச்சு, நூறு நாள் பகுதி, த.பெ.இலக்கம். 536, கொழும்பு. ∴பெக்ஸ்: 433349 ஈ-மெயில்: st@sltnet.lk வெப்தளம்: www.100day.org**




## சமாதான செயற்பாடு மற்றும் ஜனநாயகம்

■ எல்.ரீ.ரீ.ஈ.யினரின் மோதல் தவிர்ப்பு தீர்மானத்திற்கு சாதகமான பதில் அளித்தமை.
■ எல்.ரீ.ரீ.ஈ.யினரின் கட்டுப்பாட்டிலுள்ள மீட்கப்படாத பகுதிகளுக்கு குறிப்பிட்ட பொருட்களின் விநியோகத்திற்கு இருந்த தடையை நீக்கியமை.
■ அரசியல் பேச்சுவார்த்தைகளை இலகுவாக்கும் பொருட்டு நோர்வே அரசின் உதவி பெறப்பட்டது.
■ வன்னி மற்றும் யாழ்ப்பாணத்திற்கு அத்தியாவசியப் பொருட்களை கொண்டு செல்வதற்காக தரைப்பாதையை திறந்தமை.
■ இடம்பெயர்ந்தோர் மீண்டும் தமது சொந்த இடங்களுக்குச் சென்று தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட ஏதுவாக அவர்களுக்கு கண்ணி வெடிகள் தொடர்பான அறிவூட்டும் வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டமை.
■ யுத்தத்தால் அநாதையாகிய பிள்ளைகளுக்கு நலன்புரிச் சேவைகள் மற்றும் பாதுகாப்பை வழங்கும் நோக்கில் அவர்கள் தொடர்பான தகவல்கள் சேகரிக்கப்படுகிறது.
■ மடுப் பிரதேசத்தில் மின் விநியோக மற்றும் மண்ணெண்ணெய் விநியோக நிலையமொன்றை ஸ்தாபித்தல்.
■ வன்னி மாவட்டத்தில் சுகாதார சிகிச்சை மற்றும் நடமாடும் வங்கிப் பிரிவொன்றை ஸ்தாபித்தல்.
■ சுயதொழில் வாய்ப்புக்களை ஆரம்பிக்க ஏதுவாக யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களின் திறமைகளை மேம்படுத்தல்.
■ மக்களுக்கு பெரும் பாதிப்பினை ஏற்படுத்திய பாதைத் தடைகள் அகற்றப்பட்டன.




## பொருளாதார மறுமலர்ச்சி

■ முழு நாடும் 5 பொருளாதார வலையங்களாக வகுக்கப்பட்டு தேவையான வளங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அப் பொருளாதார வலையங்களில் பாதிக்கப்பட்டுள்ள தொழில் துறைகளுக்கு புத்துயிரூட்ட ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. பொருளாதார வலையங்கள்: மத்திய - கண்டி, மாத்தளை, நுவரெலியா, பதுளை, அநுராதபுரம், பொலன்நறுவை. தெற்கு - காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, மொனராகலை, இரத்தினபுரி.
வடமேல் - குருணாகல், புத்தளம், கேகாலை. மேல் - கொழும்பு, கம்பஹா, களுத்துறை. வடக்கு கிழக்கு - மட்டக்களப்பு, திருகோணமலை, முல்லைத்தீவு, திகாமடுல்ல, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வன்னி.
■ பொருளாதார மீளமைப்பு, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான ஆலோசனைச் சபையொன்றை தோற்றுவிக்க ஆரம்ப கட்ட நடவடிக்கை எடுத்தமை.
■ பேராசிரியர் மொஹான் முனசிங்க தலைமையில் தேசிய மின்சக்தி சபையை தோற்றுவித்தமை.
■ மேல் மாகாண பொருளாதார வலய அபிவிருத்தி சபையை தோற்றுவித்தமை
■ மாகாண மட்டத்தில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கு தகவல்களை சேகரிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. அதற்காக 25 பிரதேச காரியாலயங்கள் தெரிவு செய்யப்பட்டதோடு, கேள்விக் கொத்தொன்றும் தயாரிக்கப்பட்டது.
■ பிரதேச சபைகளுக்கு தரவு வங்கியொன்று ஆரம்பிக்கப்பட்டமை.
■ மேல் மாகாணத்தில் வலைய வியூக வடிவமைப்பு தொடர்பான ஆரம்ப நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.
■ வட மத்திய, தெற்கு, ஊவா, சப்ரகமுவ மற்றும் வட மேல் வலைய வடிவமைப்பிற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் தொடங்கப்பட்டன.
■ சிறிய, மத்திய மற்றும் பெரியளவிலான நிதி வளங்கள் தொடர்பில் கடைப்பிடிக்கப்படும் கொள்கைகளை மீள் பரிசீலனை செய்தமை.
■ விவசாயத் துறையை வர்த்தக மயமாக்குவதற்கும், நவீன மயமாக்குவதற்கும் தேவையான கடன் சேவையை வழங்கியமை.
■ மாகாண மட்டத்தில் வீடுகளுக்கு சூரிய சக்தியினால் மின்சாரத்தைப் பெறுவதற்கு கடன் வசதிகளை பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டமை.
■ மகாவலி வலயத்தில் 6 மகளிர் வங்கிகளை நிறுவ நடவடிக்கை எடுத்தமை.
■ டெண்டர் நடைமுறையை செயற்திறன் மிக்கதாக்க நடவடிக்கை எடுத்தமை
■ 40 ஹெக்டயரில் தென்னை, 24 ஹெக்டயரில் தோடை, 40 ஹெக்டயரில் மா மற்றும் 20 ஹெக்டயரில் ரம்புட்டான் வளர்ப்புத் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டமை.
■ உள்நாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு உருளைக் கிழங்கைப் பயிரிட 10,000 ஹெக்டயர் நிலத்தை ஒதுக்க நடவடிக்கை எடுத்தமை.
■ கெரவலப்பிட்டிய மின்னுற்பத்தி நிலையத்தை ஆரம்பிக்க ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.
■ சூரிய மின்சக்திப் பிரிவொன்று ஆரம்பிக்கப்பட்டமை.




## மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்

■ டீசல் விலை ஒரு ரூபாவால் குறைக்கப்பட்டது.
■ கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் தரமான விதைகள், விவசாய உபகரணங்கள், மீன்பிடி உபகரணங்கள், பால் உற்பத்தி உபகரணங்கள் விநியோகிக்கப்பட்டது.
■ சமுர்த்தி வங்கி மற்றும் ஏனைய கடன் திட்டங்களின் மூலம் சுயதொழில் புரிவோர் மற்றும் வேலையற்றோருக்கு கடன் வசதிகள் வழங்கப்பட்டது.
■ சமுர்த்தி நலன் பெறும் 2 மில்லியன் குடும்பங்கள் பற்றி மீளாய்வு செய்யப்பட்டது. விரைவில் புதிய அதிர்ஷ்டலாபச் சீட்டொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் ரூபா.10/- வீதம் சேர்த்து ரூபா.100 மில்லியன் பெறுமதியான நிதியம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் 100 நாள் திட்டத்தின் கீழ் சமுர்த்தி நலன் பெறும் 500 குடும்பங்களுக்கு வீடுகளை கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
■ 3 வயதுக்குக் குறைவான பிள்ளைகள், கர்ப்பிணித் தாய்மார் மற்றும் பால் கொடுக்கும் தாய்மாருக்கான போஷணைத் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது. வடக்கு கிழக்கு மாகாணங்களில் 70 சமுர்த்தி வங்கிகள் ஆரம்பிக்கப்பட்டன.
■ ஜயபூமி ஒப்பு வழங்குவதை விரைவுபடுத்தல்.
■ சிறிய குளங்கள், நீர்த்தேக்கங்கள், கிராமிய நீர் வழங்கல் திட்டங்கள், கிணறுகளை தோற்றுவித்தமை மற்றும் புனரமைத்தமை. உயர் பெறுமதியுள்ள பயிர்களை பயிரிடுவதற்கு சிறியளவிலான 100 நீர்வழங்கல் திட்டங்களை ஆரம்பிப்பதற்கு பிரேரிக்கப்பட்டுள்ளது.
■ மகாவலி விவசாய உற்பத்திகளின் மூலம் மிகச் சிறந்த பலனைப் பெறும் பொருட்டு மிகப் பெரிய பண்ணைகள் இனங்காணப்பட்டுள்ளன.
■ விவசாயக் குடும்பங்களில் எதிர்கால சந்ததியை கருத்தில் கொண்டு விவசாயத்துறை சாராத 10 தொழிற்றுறைத் திட்டங்களுக்கு ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
■ தேசிய சுகாதார சபையை மீளமைத்தல்.
■ தனியார் மருத்துவ கல்லூரி தொடர்பான பிரேரணையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
■ வெளிநாட்டில் தொழில் புரிவோர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் இனங்காணப்பட்டுள்ளது. வெளிநாட்டில் தொழில் பெற்றுச் செல்வோருக்காக புதிய பதிவு முறையொன்று ஆரம்பிக்கப்பட்டமை.
■ பிறப்புச் சான்றிதழ்களை பெறாதவர்களின் நலன் கருதி 10 நடமாடும் சேவைகள் மேற்கொள்ளப்பட்டன.
■ விமான பயணத்தை மேற்கொள்ளும் வரை விமான நிலையத்தில் தங்கியிருக்கும், வெளிநாட்டில் தொழில் புரிவோரின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அதிகாரிகளுக்கு பயிற்சியளிக்கப்பட்டது.
■ வெளிநாடுகளில் தொழில்புரிவோருக்கு பிரதேச மட்டத்தில் கடன் நிவாரண சேவைகளை விரிவு படுத்தியமை.
■ வெளிநாட்டில் தொழில் புரிவோருக்காக புதிய வீடமைப்புக் கடன் திட்டமொன்று அறிமுகப்படுத்தியமை.
■ உற்பத்திச் செலவைக் குறைப்பதற்காக தெரிவு செய்யப்பட்ட கஸ்டப் பிரதேசங்களில் அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்தமை.
■ மாகாண மட்டத்தில் தொழில் முயற்சி அபிவிருத்திக்காக சிறப்பான வேலைத் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது.
■ குறிப்பிட்ட உணவுப் பொருட்கள் தொடர்பில் துரித இந்தியக் கடன் வசதியை பிரதேச மட்டத்தில் ஏற்படுத்திக் கொடுத்தல்.
■ யுத்தத்தினால் அங்கவீனமுற்றோருக்கென, விசேட கடன் நிவாரண பிரேரணைத் திட்டமொன்றை வடிவமைத்தல்.
■ வீடுகள் அமைப்பதை ஊக்குவிக்கும் பொருட்டு வீட்டு வாடகைச் சட்டத்தை மீளமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
■ தொழிற்சாலைகளை ஆரம்பிக்கும் சட்டமூலத்தை துரிதமாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்தமை.
■ சுயதொழில்களை ஆரம்பிக்க இளைஞர் யுவதிகளுக்கு மூலதன வசதிகளை பெறும் பொருட்டு கடன் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது.
■ கிராமிய வியாபார அபிவிருத்தி வங்கியொன்றை ஆரம்பிப்பதற்கு ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது.
■ சுயதொழில் புரிவோருக்கு, ஓய்வூதிய நலன் மற்றும் சமூக அபிவிருத்தி பற்றி அறிவூட்டுவதற்கான 5 வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டது.
■ யுத்தத்தினால் அநாதையானோர், தனியாக குடும்பச் சுமையை சுமக்கும் பெண்கள் உட்பட வீடற்ற குடும்பங்களுக்கு வீடுகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
■ மருந்துகளை பெயர் குறிப்பிட்டு சிபாரிசு செய்வதில் உள்ள முக்கியத்துவம் பற்றி அரச மருத்துவர்களுக்கு அறிவுறுத்தும் நடவடிக்கையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
■ வைத்திய அதிகாரிகள் மற்றும் ஹோமியோபதி மருத்துவ ஊழியர்களை நியமிக்கும் வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
■ தேசிய வைத்திய சட்ட வரையறையை பலப்படுத்தும் பொருட்டு ஆயுர் வேத சட்டமூலத்திற்கு தேவையான மாற்றங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது.
■ திரிபோஷாவை இலகுவில் பெறுவதற்கும் விநியோகிப்பதற்கும் தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
■ தேசிய போஷணை வேலைத் திட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
■ 400 குடும்பங்களின் போஷணை மட்டத்தை உயர்த்தும் பொறுப்பு ஆயுர்வேத சமூக மருத்துவ உதவியாளர்கள் 100 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது.
■ தற்பொழுது கொழும்பை மட்டும் கருத்தில் கொண்ட வாழ்க்கைச் செலவு சுட்டெண், அகில இலங்கை ரீதியில் தயாரிக்கப்பட்டுள்ளது.




## அரச சேவை

■ 17வது திருத்தச் சட்ட மூலத்திற்கு அமைவாக அரச சேவை ஆணைக்குழு மீளமைக்கப்பட்டமை.
■ அரசியலமைப்புச் சபையை தோற்றுவிப்பதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்தமை.
■ அரச சேவைகள் ஆணைக்குழுவை நடுநிலைப்படுத்துவதற்காக தொடர்புபட்ட நிறுவனங்களுக்கிடையில் இணைப்பினை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்தமை.



## அடிப்படை உரிமைகள்

■ 5% காணிப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டதுடன் இலங்கை மகாவலி அதிகார சபையின் காணி ஆவணங்களை கணனி மயப்படுத்தியமை.
■ மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உதவியுடன் காணி அமைச்சுக்கு சட்ட ஆலோசனை மற்றும் மத்தியஸ்தர்களை பயிற்றுவித்தமை.
■ நகர வீடமைப்புத் திட்டங்களின் கீழ் வீடுகளைப் பெற்ற 2,438 பேருக்கு ஒப்புகளை வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டமை.
■ 15 வீடமைப்புத் திட்டங்களின் மூலம் 2,570 பேருக்கு வீட்டுரிமையை பெற்றுக் கொடுத்தமை.
■ புதிய கிராமங்களில் காணிகளைப் பெற்ற 250 பேருக்கு ஒப்புகளை வழங்கும் நடவடிக்கையை ஆரம்பித்தமை.
■ சர்வதேச தொழிலாளர் அமைப்புக்கள், ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், தனியார் துறை மற்றும் அரச துறையுடன் குறிப்பிட்ட விடயம் தொடர்பாக பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தல்.
■ கொள்கைகளை வடிவமைப்பதற்காக தேசிய வேலை வாய்ப்பு ஆலோசனை ஆணைக்குழுவொன்றை அமைத்தமை.
■ மகளிர் மற்றும் இளம் ஊழியர்களின் மேலதிக நேர வேலை தொடர்பான சட்டங்களை மீளமைக்க நடவடிக்கை எடுத்தமை.
■ வேலையிலிருந்து இடை நிறுத்தும் சட்ட மூலம், கைத் தொழில் சிக்கல்கள் சட்ட மூலம் மற்றும் சம்பள சபை சட்டமூலம் போன்ற சட்டமூலங்களை மீளமைக்கும் நடவடிக்கையை ஆரம்பித்தமை.



## ஆற்றல் மிக்க அரச நிர்வாகம்

■ ஊடக நிறுவனங்களை அரசியல் கலப்பற்றதாக்கி சுதந்திர ஊடக அமைப்புகளாக மாற்றி, சரியான தகவல்களை வழங்குவதை உறுதிப்படுத்தியமை.
■ அனைத்துப் பிரிவுகளிலும் ஊழியர்களை சேர்க்கும் பொழுது திறமை அடிப்படையில் மட்டும் தெரிவு செய்வதற்கு ஆலோசனை வழங்கியமை.
■ பிரதேச நிர்வாகத்தில் மகளிர் பங்களிப்பை அதிகரிப்பதற்காக மகளிர் விவகார அமைச்சுடன் ஆரம்ப கட்ட பேச்சுவார்த்தையை ஆரம்பித்தமை.
■ "தேசிய மகளிர் கமிட்டி" தொடர்பான வரைபு பிரதி தொடர்பான நடவடிக்கையை ஆரம்பித்தல்.
■ சட்டத் திருத்தம் தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நீதி ஆணைக்குழுவுடன் செயற்பாடுகளை ஆரம்பித்தல்.



## இளைஞர், விளையாட்டு மற்றும் கலாசாரம்

■ இலங்கை இளைஞர் அழக சம்மேளனம் மற்றும் நிலகோ நிறுவனத்திற்கு அங்கத்தவர்களை சேர்த்துக் கொள்வதற்கான வேலைத் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
■ இளைஞர் சேனையின் ஆரம்ப வைபவத்தை 2002 மே மாதத்தில் நடாத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதற்காக மார்ச் வரவு செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.
■ க.பொ.த (உ.த) மாணவர்களின் பரீட்சைக்குள் அடங்காத மேலதிக பாடமாக தகவல் தொழில்நுட்பத்தை உள்ளடக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.
■ தகவல் தொழில்நுட்ப நிலையங்களை நிறுவுவதற்கு 25 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அதற்கான பயிற்சி அளிப்பதற்கு 600 ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
■ தேசிய மட்டத்தில் மற்றும் கனிஷ்ட மட்டத்தில் விளையாட்டுக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
■ 30 பிரதேச காரியாலயங்களில் விளையாட்டுக் குழுக்கள் அமைக்கப்படும்.
■ களனி, கதிர்காமம், சீத்தாவக்க, தெவிநுவர, படகல, கோட்டே, கொடக்கவெல, காத்தான்குடி, அளுவிகார, மண்டுவஸ்நுவர, மற்றும் மகியங்கனை போன்ற இடங்களில் வணக்கஸ்தலங்களை அபிவிருத்தி செய்யும் வேலைத் திட்டமொன்றை ஆரம்பித்தல்.

**பண்பான சமுதாயம் - வளமான பொருளாதாரம்**

# சுன்னாகம், நெல்லியடியில் விரைவில் ஹற்றன் நஷனல் வங்கிக் கிளைகள்

யாழ்ப்பாணம்,ஜன.28

ஹற்றன் நஷனல் வங்கி எதிர் வரும் மார்ச் மாதம் முதல் நெல்லியடி, சுன்னாகம் ஆகிய இடங்களில் வங்கிக் கிளைகளை புதிதாக ஆரம்பிக்கவுள்ளதாக வங்கியின் யாழ். கிளை முகாமையாளர் தி.ஜெயராஜசிங்கம் தெரிவித்தார்.

புதிய கிளைகள் ஆரம்பிக்கப் படுவதன்மூலம் வங்கியின் செயற்பாடுகள் பரவலாக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை -

ஹற்றன் நஷனல் வங்கியின் சகல செயற்பாடுகளும் கணனி மயப் படுத்தப்படவுள்ளன என்றும் மேலும் தெரிவித்தார்.

(ம-7-180)


## 31ஆம் நாளில் துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலையின் சங்கீத ஆசிரியை

திருமதி ப.சந்தானலக்ஷமி அவர்களின் அன்புத் தந்தையார்

**ஐயாத்துரை தம்பிராசா (குஞ்சிப் பத்தர்)**

அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம். அவரது ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகின்றோம்.

- அதிபர், ஆசிரியர், மாணவர்கள்.

*யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்.* (97581)


## தேவாரத்திரட்டு முற்றோதல்

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்தம் பௌர்ணமித் தினத்தில் நடத்திவரும் அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறைப்பாராயணம் என்பன இன்று காலை 8.00 மணிக்கு மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் அவர்களின் தலைமையில் யாழ் வண்ணை காங்கேசன்துறை வீதி குளங்கரை ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தானத்தில் (நாச்சிமார்கோயி லில்) நடைபெறும். (ம)

## மாதாந்த உதவிப் பணம்

வலிகாமம் தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் மற்றும் காசநோய், தொழுநோய், புற்று நோய், யானைக்கால் நோய் என்பவற்றுக்கான உதவிப் பணம் பெறுபவர்களுக்கான இம்மாதக் கொடுப்பனவுகளுக்குரிய வவுச்சர்கள் அந்தந்தத் தபாலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.(ம-152)

# தென்னிந்திய திருச்சபைப் பேராயராக கலாநிதி சாமுவேல் மீண்டும் தெரிவு

யாழ்ப்பாணம்,ஜன.28

யாழ்ப்பாண அத்தியட்சாதீனத்தை உள்ளடக்கிய தென்னிந்தியத் திருச்சபையின் தலைமைப் பேராயராக கலாநிதி கே.ஜே.சாமுவேல் மீண்டும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை நிகழும் பேராயர் தெரிவு தொடர்பான தென்னிந்திய திருச்சபை செனட்டின் மகாசபைக் கூட்டம் கடந்த 11ஆம் திகதி முதல் 15ஆம் திகதிவரை கிழக்கு கேரளத்திலுள்ள மேலுகாவுமட்டம் என்ற இடத்தில் நடைபெற்றது.

கேரள முதலமைச்சர் ஏ.கே. அந்தோனி இந்தக் கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

துணைத் தலைமைப் பேராயராக ஆந்திர பிரதேச பேராயர் கலாநிதி பி.பி.சுகந்தரும், செயலாளராக ஆந்திரப் பிரதேச முறைமாவட்டத்தைச் சேர்ந்த கலாநிதி ஜி.தேவாசீர்வாதமும், பொருளாளராக சென்னை மறைமாவட்டத்தைச் சேர்ந்த பிரடெறிக் வில்லியமும் தெரிவுசெய்யப்பட்டனர்.

நிர்வாகசபை உறுப்பினர்களாக, யாழ். மறை மாவட்டத்தைச் சேர்ந்த வண. செல்லத்துரை ஜெயநேசன், திருமதி தயாளினி தியாகராசா ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இருபத்தொரு பேர் கொண்ட நிர்வாக சபையின் அந்தரக் குழுவின் உறுப்பினராக யாழ். பேராயர் அதி. வந்தனைக்குரிய கலாநிதி எஸ். ஜெபநேசன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். (ம-7)


TEGOSL

இலங்கைப் பத்திரிகை ஆசிரியர் பேரவை

EXCELLENCE IN JOURNALISM AWARDS 2001

# பத்திரிகைத் துறையில் விசேட திறமைக்கான விருதுகள் - 2001

2001 ஆம் ஆண்டில் அச்சு ஊடகத்துறைக்கு தங்கள் பங்களிப்பை வழங்கியவர்களிடமிருந்து கீழ்வரும் விருதுகளுக்கான விண்ணப்பங்களை இலங்கைப் பத்திரிகை ஆசிரியர் பேரவை கோரியுள்ளது. வருடாந்த விருது வழங்கும் திட்டத்தின் நோக்கம் உயர்மட்ட தொழிற்திறனை அங்கீகரிப்பதும், குறிப்பிட்ட வருடத்தில் விசேட திறமையுடன் பணிபுரிந்தவர்களுக்கு விருது வழங்குவதுமாகும். இலங்கையில் மூன்று மொழிகளிலும் வெளியிடப்படும் பத்திரிகைகளைச் சேர்ந்து சுய அடிப்படையிலான பத்திரிகையாளர் உட்பட சகல பத்திரிகையாளரும் இந்தத் திட்டத்தில் சேர்ந்துகொள்ளமுடியும்.

பேரவையின் சார்பில், ஊடகத்துறையைச் சேர்ந்த சுதந்திரமான நடுவர் குழு விருது பெறுபவர்களைத் தெரிவுசெய்யும். இந்த வருடப் பிற்பகுதியில் நடைபெறும் வைபவத்தில் கீழ்க்காணும் பெறுமதிமிக்க விருதுகள் வழங்கப்படவிருக்கின்றன.

| | | |
|---|---|---|
| 1. மேர்வின் டி சில்வா | : | ஆண்டின் சிறந்த பத்திரிகையாளர். |
| 2. D.R.விஜயவர்த்தனா | : | அறிஞர்களினதும் மக்களினதும் பாராட்டைப் பெற்றமைக்கான விருது. |
| 3. சேபால குணசேன | : | இலங்கையிற் பத்திரிகைச் சுதந்திரத்தைக் காப்பாற்றியமைக்கான விருது. |
| 4. உபாலி விஜயவர்த்தனா | : | ஆண்டின் சிறப்புக் கட்டுரை எழுத்தாளர் |
| 5. D.B.தனபால | : | ஆண்டின் உடனடி விசேட செய்தி. |
| 6. B.A.சிறிவர்த்தனா: | | ஆண்டின் வழமையான கட்டுரையாசிரியர் |
| 7. பேராசிரியர் K. கைலாசபதி | : | ஆண்டின் சிறந்த பத்திரிகையாளர். |

8. ஆண்டின் சிறந்த சுற்றாடல் முக்கியத்துவம் வாய்ந்த அறிக்கை:
9. ஆண்டின் விளையாட்டுத்துறைப் பத்திரிகையாளர்:
10.ஆண்டின் கேலிச்சித்திர நிபுணர்.
11.ஆண்டின் படப்பிடிப்பாளர்:
12.ஆண்டின் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட பத்திரிகை:
13.ஆண்டின் இளம்செய்தியாளர் (30 வயதுக்குக் கீழ்):
14.சிறந்த பத்திரிகையாளர் (3 பிரிவுகள்) சிங்களம், தமிழ், ஆங்கில ஊடகங்கள்:
15. நடுவர்களின் தீர்மானத்தின் அடிப்படையில் விசேட விருதுகள்/பாராட்டுக்கள்:

**விண்ணப்பங்கள் தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ அனுப்பப்படவேண்டிய முகவரி:**

திரு.அமல் ஜயசிங்க,
அமைப்பாளர், நடுவர்குழு, விசேட திறமைக்கான விருதுகள் - 2001,
இல.100, பாண்ஸ் பிளேஸ்,
கொழும்பு - 7.

விண்ணப்பங்கள் 2001 ஜனவரி முதலாம் திகதிக்கும் 2001 டிசெம்பர் 31ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தைக் கொண்டிருப்பது அவசியம்.

*வழிமுறை:* அச்சு ஊடகத்துறையைச் சேர்ந்த எந்தவொரு பத்திரிகையாளரும்/ அவரது பத்திரிகையாசிரியர் மூலம் அல்லது எந்தவொரு பத்திரிகையாளரின் சார்பில், பேரவையின் எந்தவோர் அங்கத்துவம், பத்திரிகையாளரது படைப்பின் கீழே பிரசுரிக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பங்களை அனுப்பமுடியும்.

**விண்ணப்பங்களுக்கான கடைசித் திகதி 2002 பெப்ரவரி 15.**

### மாதிரி விண்ணப்பப் படிவம்

### பத்திரிகைத்துறை விசேட திறமைக்கான விருதுகள் - 2001

விண்ணப்பிக்கப்பட்ட பிரிவு:

பெயர்:

வெளியீடு:

(பிரிவுகள் அட்டவணையிலிருந்து ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்யவும் ஒன்றுக்கு மேற்பட்ட பிரிவுகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களோடு தனித்தனியாக விண்ணப்பிப்பதை நிச்சயித்துக்கொள்ளவேண்டும்).

சமர்ப்பிக்கப்பட்ட பத்திரிகைச் செய்திகளின் அட்டவணை:

(வெட்டிக்கொடுக்கப்பட்ட ஒவ்வொரு விடயமும் சுருக்கமான குறிப்புடன் அட்டவணைப்படுத்தப்படவேண்டும். *உதாரணம்: பிரசுரமான திகதி* போன்றவை)

1.
2.
3.

ஆசிரியர்/செய்தியாசிரியர்/சிறப்புக்கட்டுரையாசிரியர்/படங்கள் ஆசிரியர் அல்லது பிரதம உதவி ஆசிரியரின் பரிந்துரை (இது கட்டாய தேவை அல்ல).

ஆசிரியர் ஒப்பம் (Q20 438) விண்ணப்பதாரர்



# Jaffna College Institute of Technology

## Vaddukoddai, Jaffna, Sri Lanka

STUDENTS ARE WELCOME
for the following courses commence on
5th February 2002

**Certificate Courses in Business & Scientific Applications**

- MS Word
- MS Excel
- MS Access
- MS Power Point
- Visual Basic 6.0
- FoxPro
- JAVA
- C/C++
- Pascal
- dBase III



*Duration: 3- 4 Months.*

**Certificate Craft Courses (தமிழ் மூலம்)**

- Mechanical Craftsman Practice
- Electrical Wiring & Installation Practice
- Automobile Technology
- Radio & T.V. Servicing
- Foundry Practice
- Air - Conditioning & Refrigeration

*Duration: 6 - 12 Months (full time)*

Facilities:- Library, Hostel & Sports.

Application forms are available at

- ***JCIT, Vaddukoddai***
- ***Undergraduate department, Jaffna College***
  *(Hospital Road, Jaffna)*

*Director*

**Jaffna College Institute Of Technology, Vaddukoddai.**

**Tel.: 070 213139** (C20 639)



# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 02 - 03 - 1913



உதிர்வு 11 - 01 - 1998

## திருமதி நாகம்மா சின்னையா

திதி: தைப்பூரணை 28.01.2002

பாசத்தின் உறைவிடமே! பண்பின் சிகரமே!
எம்குடும்பத்தின் ஒளிவிளக்கே!
அம்மா! நிழலற்று மரமாக அகன்றதே
நான்கு ஆண்டு
ஆயிரம் உறவுகள் இருந்து என்ன?
அம்மா உங்கள் அணைப்புக்கு ஈடாகுமா?
"தாயின் மடியில் தலை வைத்திருந்தால்
துயரம் தெரிவதில்லை"
அம்மா! அம்மா!! அம்மா!!!
*உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*நல்லூர்க்கந்தன் அருள் வேண்டி கைகூப்பி நிற்கின்றோம்.*

*29/1, செட்டித்தெரு லேன்,*
*நல்லூர்.*
(97584)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

# யாழ். கல்வியியற் கல்லூரிக்கு தெரிவு செய்யப்பட்டோர் விவரம்

யாழ்ப்பாணம், ஜன. 28

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு 2001/2002 ஆம் கல்வி ஆண்டு கற்கை நெறிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களின் பெயர் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

கணிதம், நடனம், விஞ்ஞானம், சித்திரம், சங்கீதம், ஆரம்பக்கல்வி, நூலக விஞ்ஞானம் ஆகிய கற்கை நெறிகளுக்கு 171 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களின் பெயர் விவரம் பாட ரீதியாக வருமாறு:-

### கணிதம்

எஸ். சந்திரன் (புளியம் பொக்கணை) எஸ். ராஜதீபன் (உரும்பிராய் வடக்கு), எஸ். அகிலன் (கச்சாய் தெற்கு), கே. ரேணுகா (வசாவிளான்), எஸ். சுஜீத்தா (வட்டுக்கோட்டை), வி. ஜெகதீஸ்வரன் (விசுவமடு).

வி. துஷ்யந்தன் (சங்கானை), பி. பிரசன்னா (யாழ். வீதி), கே. சிவாஜினி (இமையாணன் மேற்கு), ஈ. செல்வரஞ்சினி (செம்பியன் பற்று தெற்கு), ரி. ஜெயதர்சி (சாவகச்சேரி), ரி. தர்சினி (மல்லாகம்), எஸ். சிவகாந்தன் (கற்குழி வடக்கு).

என். பிரசாந்தன் (அராலி வடக்கு), எஸ். சஜீவ் (அல்வாய் வடக்கு), ஜே. சசிதாசன் (உக்குழாங்குளம்), என். சுதாகர் (தும்பளை மேற்கு), எஸ். அம்பாலிகை (அளவெட்டி), எஸ். வாகீஸ்வரன் (திருநெல்வேலி).

கே. உமாகரன் (தாவடி வடக்கு), எஸ். சன்சலா (வட்டு. மேற்கு), எஸ். சசாந்தினி (கம்பகா), ஆர். அபிராமி (கொக்குவில் மேற்கு), எம். யதீசன் (நீர்வேலி வடக்கு), எஸ். எலன் திவாகர் (வட்டுக்கோட்டை), எஸ். நவநீதன் (புலோலி தெற்கு), எஸ். கிருஷ்ணதாஸ் (சுதுமலை வடக்கு).

டி. பகீரதன் (வேப்பங்குளம்), பி. உலாசனன் (மானிப்பாய் மேற்கு), எஸ். வாசவன் (அக்கரைப்பற்று), ரி. தினேஷ் (கந்தர்மடம்), எஸ். ஜெயந்தீபன் (கரணவாய் மத்தி). கே. சசிதரன் (மீசாலை மேற்கு), கே. பாலகுமாரி (உடுப்பிட்டி).

எஸ். சங்கரன் (அல்வாய் மேற்கு), எஸ். விஜிதாசன் (கல்முனை), எம். ரி. அருபதவராஜ் (வவுனியா), பி. கோபிகிருஷ்ணா (வட்டுக்கச்சி), ரி யுகேஸ் (மல்லாவி), வி. பி. மாதவராஜ் (நல்லூர் கிழக்கு).

### விஞ்ஞானம்

எஸ். சுதர்சினி (கம்பஸ் லேன் திருநெல்வேலி), எம். தர்மினி (சங்குவேலி தெற்கு), ரி. றஜீதன் (எழுதுமட்டுவாள் தெற்கு), எஸ். அகிலன் (கல்வயல் சாவகச்சேரி), எஸ். கார்த்திகா (கொக்குவில் கிழக்கு), பி. சுதர்சனா (இடைக்காடு, அச்சுவேலி), எஸ். தியாகசொரூபி(களபூமி காரைநகர்).

பி. சிவசுதன்(கந்தர்மடம்), எஸ். சுதர்சனா (கல்வயல், சாவகச்சேரி), எஸ் சனந்தன் (அளவெட்டி மேற்கு), எஸ். தர்மிலா (நெல்லியடி), என். துளசி(புலோலி மேற்கு), எஸ். குயிலினி (கரணவாய் கிழக்கு, காவெட்டி), வி. மதிவதனா (நாச்சிமார் கோயிலடி), ஆர். வாசுகி (சுன்னாகம்).

எஸ். விக்னேஸ்வரராஜா (கஜுதாவளை-4), கே. அருட்செல்வி (நாச்சிமார் கோயிலடி), பி. கவிதா (பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்), ஆர். சிவானந்தி (ஸ்கந்தபுரம், கிளிநொச்சி), எஸ். சிவறஞ்சினி(உடுவில் கிழக்கு), எம் எம். றிபான் (மூதூர்-4), எம். நாகநந்தினி (அராலி மத்தி), ரி. மைதிலி (புலோலி தெற்கு).

ரி. ரமணன் [கிளிநொச்சி], ஜி. கவிதினி [2 ஆம், குறுக்குத் தெரு, வவுனியா], பி. ராஜலோசனா [நீர்வேலி தெற்கு], எஸ். வளர்மதி [நீர்வேலி வடக்கு], ஆர். ராதிகா [நீர்வேலி தெற்கு], எஸ். சதீஸ்குமார் [நாவற்காடு, மட்டக்களப்பு], எஸ். விஜிலியா [திருகோணமலை].

ரி கௌரி [குளப்பிட்டி, கொக்குவில்], பி. பத்மலோஜினி [உசன் மிருசுவில்], பி. இதயமலர் [அல்லாரை வடக்கு], எஸ். வினோதா [கம்பர்மலை], பி. செந்தில்குமரன் [கொலம்பகம், யாழ்ப்பாணம்], எஸ். லோஜிதராஜா [பெரிய போரதீவு], பி. பார்த்திபன் [ஸ்கந்தபுரம். கிளிநொச்சி], எஸ். ஜெய தர்சினி [வேப்பங்குளம், வவுனியா], எஸ். விஜயகுமார் [தம்பிலுவில்], எஸ். தயாராணி [முள்ளியவளை].

### ஆரம்பக்கல்வி

ரி. ஜெயந்தினி (மீசாலை), எஸ் சகுந்தலா (அராலி மத்தி), கே. காஞ்சனா (தெல்லிப்பளை) எஸ். வனஜா (பண்டத்தரிப்பு), கே. கலாஜினி, (நவாலி கிழக்கு), எம். சசிகலா (மருதன்குளம்), வி. தர்மினி (சாவகச்சேரி), பி. வாசுகி (சுண்டுக்குளி), பி. சிகந்தினி (சண்டிலிப்பாய்), கே. ஹம்சன் (ஆனைக்கோட்டை).

ரி. தர்சிகா (மந்துவில் கிழக்கு), ஜி ஜீவறேகா (சங்குவேலி தெற்கு), எஸ் சத்தியபிரியா (உரும்பிராய் வடக்கு), எம். மகனறாஜி (இணுவில் கிழக்கு), ஜி உமா (கொக்குவில் கிழக்கு) எஸ். எம். ஜெயகாந்தன் பன்னாகம்)

வி இவான் ஜிலின் பெனிற்ரா (திருக்குடும்பக் கன்னியர்மடம் இளவாலை), எம். பஞ்சாதினி (நல்லூர்), ரி விஜிகலா (மானிப்பாய்), எஸ யாலினி (பத்தமேனி அச்சுவேலி), ஆர். சந்திரலேகா (அச்சுவேலி), கே. கலைச்செல்வி (நல்லூர்), ஜே. ஜெயஜீவன் (அளவெட்டி வடக்கு).

லோறன்ஸ் விமலகாந்தன் (நெடுந்தீவு) ஜே. ஜே. டி. மரியசெல்வம்(நவாலி தெற்கு) எம். வசந்தநாயகி (விடத்தற்பளை மிருசுவில்), ஈ. சிவராதிகா (சரசாலை வடக்கு).

வை. தர்சினி (மீசாலை வடக்கு], கே. றாதிகா [தெல்லிப்பழை], ரி. விஜிதா [வளலாய் மேற்கு] ரி. நிர்மலன் [தம்பசிட்டி, புலோலி மேற்கு], பி. ஆசியா [தையிட்டி], பி. கல்யாணி [பருத்தித்துறை], பி. ஆர். அகிலநாயகம் [நாவாந்துறை] ஜி சிவகாமி [வண்ணார் பண்ணை] என். சசிகலா [கைதடி], எஸ். வேணிலா [பொலிகண்டி தெற்கு], வி. ஞானறூபி [வண்ணார் பண்ணை], ரி. சுவர்ணா [அரசடி றோட், யாழ்ப்பாணம்), எஸ். தலாமி [பொலிகண்டி], என். சசிகலா [கைதடி].

### நூலக விஞ்ஞானம்

எச். என். மேரியானா (பண்டத்தரிப்பு), ரி. உசாந்தினி (மானிப்பாய்), கே. குவதர்சினி (அல்வாய் மேற்கு), எல். விமலகாந்தன் (நெடுந்தீவு), எஸ் அம்பிகா (உடுவில் மேற்கு), ஜே. சிறீகாந் (யாழ்ப்பாணம்), எல். மீரா (மானிப்பாய்).

எல். சுரேந்தினி (மட்டுவில் வடக்கு), என். பகீரதி (உடுவில் கிழக்கு), எஸ். வானதி (கொக்குவில் கிழக்கு), பி. துளசி இமையாணன் மேற்கு), ரி. சிவபாமா (மிருசுவில்), கே. துஷியந்தினி (ஒட்டுசுட்டான்), ரி. தயாளினி (சாவகச்சேரி).

கே. நிமலன் (மட்டக்களப்பு), கே. கேமசலா (மட்டக்களப்பு), எஸ். காயத்திரி (சுன்னாகம்), எஸ். சிவகரன் (ஒட்டுசுட்டான்). ஜி. சுதர்சினி (திருநெல்வேலி தெற்கு). எஸ். ஸ்ரீவினோதன் (வட்டக்கச்சி).

### சங்கீதம்

கே. ராதிகா [வீமன் காமம்], எஸ். கௌசல்யா [வவுனியா]. எஸ். செல்வரஞ்சிதமலர் [வரணி], எஸ். கேதீஸ்வரி [செம்மலை அலம்பில்], ரி. ரஜினி [மீசாலை வடக்கு], எஸ். கோமதி [மயிலிட்டி வடக்கு].

என். கமலலோஜினி [தாவளை இயற்றாலை], எஸ் அருள்மொழி[கரவெட்டி கிழக்கு], ஏ. தனுஜா[இடைக்காடு], ஆர். ரஜனி [நவிண்டில்), கே தர்மினி [புன்னாலைக்கட்டுவன்], சி. கீலின் [மன்னார்], எஸ். சர்மிளா தேவி [வரணி], ரி. தவரூபி [வல்வெட்டி].

கே. சித்ரா [மன்னார்], எஸ். விஜயதர்சினி [மட்டக்களப்பு], வை. புஸ்பலதா [சண்டிலிப்பாய்], எஸ். ஞானரஞ்ஜன்[வல்வெட்டித்துறை], சி தனுசியா [மாமுனை], என். அம்பிகா [புலோலி தெற்கு].

### சித்திரம்

கே. சுதீஸ் [புதுக்குடியிருப்பு], ஏ. ஜெபதீபன் [மட்டக்களப்பு), ரி. மாலினி (அல்வாய் கிழக்கு), என். எம். யசீர் மஜித் (கிண்ணியா).

### நடனம்

ஆர். தபோதினி (நவாலி தெற்கு), எஸ் கிரிலோஜினி (கரணவாய் கிழக்கு), ஏ. யசோதினி (கல்லடி), எஸ். தர்சினி (வன்னேரிக்குளம்), எஸ் கிமாலநா (செட்டிப்பாளயம்), எஸ். ரேணுகா தேவி (வவுனியா).

(ம-6-7)

# சுபகாரியங்கள் செய்வதற்கு உகந்த நன்னாள் தைப்பூசம்

பண்டைக்காலம் தொடக்கம் இந்துமக்கள் அனுஷ்டித்து வரும் புண்ணிய தினங்களில் ஆழ்ந்த அர்த்தமுள்ள கருத்துக்கள் புதைந்துள்ளன. இந்த வகையில் ''தைப்பூசம்'' ஒரு சுபதினமாகும். இந்த நல்ல நாளில் எந்த ஒரு சுபகாரியத்தையும் செய்யலாம்.

இருபத்தொரு நட்சத்திரங்களுள் பூசம் அல்லது புஷ்யம் எட்டாவதாகும். தைமாதத்தில் பூச நட்சத்திரம் வரும் நாள் அனேகமாக நிறையதி நாளாக இருக்கும். இதனைப் புண்ணியநாளாக இந்துக்கள் கொண்டாடுவர்.

தேவர்களின் குருவாகியபிரகஸ்பதியை பூச நட்சத்திரத்தின் தேவதை என்பர், பிரகஸ்பதியை அறிவின் தேவதை என இந்துக்கள் நம்புவதால் பூச நட்சத்திரத்தை வணங்கினால் பிரகஸ்பதியின் அருள் கிடைக்கும் என்பர். தைப்பூச நன்னாளில் புண்ணிய நதியில் நீராடினால் அதிக புண்ணியம் கிடைக்கும்.

தைப்பூச நன்னாளில் புதிதாய் விளைந்த தானியக் கதிர்களை உழவர்கள் வீட்டிற்கு எடுத்து வருவார்கள். இது''புதிது எடுத்தல்'' எனப்படும். வீட்டில் சேர்ந்த நெல் மணிகளை கடவுள், தேவர் விழாக்களுக்கு அர்ப்பணித்து மகிழ்வார்கள். மற்றும் தம்முடன் சேர்ந்து பாடுபட்ட இனத்தவர்கள், நண்பர்கள், ஏழை எளியவர்களுக்கும் கொடுப்பர்.

'சமூகஜோதி'
**கா. கணேசதாசன்**

தைப்பூசம் ஆதிசேடனும் வியாக்கிய பாதரும் காண இறைவன் இன்பத் திரு நடனம் ஆடிய நாளாகவும் விளங்குகிறது. இதனை மணிவாசகர் ''பதஞ்சலிக்கருளிய பரம



நாடகம்'' என்று அருளியுள்ளார். தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ''திருவிடை மருதூர்'' இத்தைப்பூச விழாவிற்குச் சிறந்த தலமாகும்.

பூச நட்சத்திரத்தை வடமொழியில் திஷ்யம் என அழைப்பார்கள். திஷ்யம் என்பது தைசம் எனவரும். தைசம் என்பது தை என மருவி நின்றது.

தைப்பூசத்தின் சிறப்பை உணர்த்தும் வகையில் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் பாடிய தேவாரம் இது வாகும்.

''தைப்பூசமொண்கண்மட
நல்லார் மாமயிலைக்
கைப்பூச நீற்றான் கபாலீச்
சரமமர்ந்தான்
நெய்ப்பூசமொண்புழுக்கல்
நேரிழையார் கொண்
டாடும்
தைப்பூசங்காணாதேபோதி
யோ பூம்பாவாய்''.

தைப்பூச நன்னாளில் முருகனுக்குரிய சிறப்புத் திருநாளாகவும் விழா எடுக்கப்படுகிறது. தமிழகத்தில் குமரக் கடவுளின் திருத்தலங்களான அறுபடை விடுகள் அமைந்த திருக்கோயில்களில் தைப்பூசத் திருவிழா பக்தி மணம் கமழக் கொண்டாடப்படுவதுஉண்டு. திருச்செந்தூர், பழனி, திருப்பரங்குன்றம் உட்பட்ட முருகன் திருத்தலங்களில் இன்றைய தினம் அருளொளி துலங்கிப் பிரகாசிக்கக் காணலாம்.

ஈழத்திலும் முருகன் ஆலயங்களில் இன்று தேர்த்திருவிழாக்களும், விசேட அபிஷேகபூசை வழிபாடுகளும் நடைபெறும்.

தந்தைக்கு உபதேசித்த ஞானக்குமரனின் சிறப்புடைத்திருவிழா நடைபெறும் இன்று குழந்தைகளுக்கு ஏடு தொடக்கி கல்வி ஆரம்பம் செய்து வைக்கும் நிகழ்வுகளும் இடம்பெறும்.

தைப்பூசத் திருநாள் பல அம்சங்களிலும் விசேட அருள் நாளாகும்.

## புராணபடனம்

திருநெல்வேலி அருள்மிகு தலங்காவற் பிள்ளையார் ஆலயத்தில் இன்று காலை 10 மணி முதல் கந்த புராணப் புராணபடனம் ஆரம்பமாகித் தொடர்ந்து இடம்பெறவுள்ளது.

பௌராணிகர் எஸ். ஆறுமுகம் புராணபடனத்தை ஆரம்பித்து வைப்பார் (ம-)

வடமராட்சிப் பிரதேசத்தில்

# காலங்கடந்த பிறப்புக்களைப் பதிவதற்கு உடன் நடவடிக்கை

வடமராட்சி கிழக்கு, ஜன.28

வடமராட்சியில் இதுவரை பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் பெறாதவர்களுக்கு, காலங் கடந்த பிறப்பினை நூறு நாள் வேலைத் திட்டத்தின் கீழ் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நாளை மறுதினம் புதன் கிழமை பருத்தித்துறையிலுள்ளவடமராட்சி பிறப்பு, இறப்பு, விவாக, காணி பெரும்பாக பதிவுகாரர் அலுவலகத்தில், அதிகாரிகளால் இந்தநடவடிக்கைமேற்கொள்ளப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

பருத்தித்துறை, கரவெட்டி பிரதேச செயலர் பிரிவிலும், மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் உள்ளவர்கள், தமது பிரிவு கிராம சேவையாளர்களைச் சந்தித்து இது பற்றிய மேலதிக விவரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

(ம-182)

## பொது அறிவுப் போட்டி

வடமராட்சி, ஜன, 28

வடமராட்சி வலயப் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான பொது அறிவுப்போட்டிக்கான விண்ணப்பங்கள் வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களத்தால் கோரப்பட்டுள்ளன,

தரம் 6 தொடக்கம் தரம் 11 வரை கல்வி கற்கின்ற மாணவர்களிடையே இப்போட்டி நடைபெறவுள்ளது.

விண்ணப்பங்களை எதிர் வரும் 5ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது

(ம-182)

## அ. அட்டைகளைத் தொலைத்தவர்க்கு

யாழ்ப்பாணம், ஜன. 28

யாழ். போதனா வைத்திய சாலையில் கண்டெடுக்கப்பட்ட இரு அடையாள அட்டைகள், வைத்திசாலை நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

கந்தசாமி வள்ளியம்மை இல. 0907023988, சதானந்தன் சிவனேஸ்வரி இல. 577883270V ஆகிய அடையாள அட்டைகளே கண்டெடுக்கப்பட்டவையாகும்.

உரியவர்கள் நிர்வாகத்திடம் பெற்றுக்கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

(ம-15)

## கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன 28

கைதடி வணிகர் கழக அங்கத்தவர்களுக்கான கூட்டம் அடுத்த மாதம் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கைதடி ஸ்ரீ சச்சிதானந்தா தொலைத் தொடர்பு நிலையத்தில் உப தலைவர் செ தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கைதடி வணிகர் கழகத்தில் புதிதாக இணைய விரும்பும் வர்த்தகர்கள் உட்பட அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது சமூகமளிக்குமாறு வணிகர் கழகம் அறிவித்துள்ளது.

(6)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## வகுப்புகள்

கணிதத்தில் சிறந்த பெறுபேறு அடைய வேண்டுமா? கணிதம் கற்பிப்பதில் 40 வருடங்களுக்குமேல் அனுபவம்வாய்ந்த ஆசிரியரினால் மிகக் குறுகியகாலத்தில் சிறந்த பெறுபேறுகளுக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டு, அடிப்படை அறிவிலிருந்து கற்பிக்கப்படும். O/L,10, 9, 8, 7, 6. இல.8, பிளர்ச்சஸ் ஒழுங்கை, சுண்டுக்குளி. மாணவர் வசதிக்கேற்ப நேரம் ஒதுக்கப்படும். (97555)

ஆண்டு 6 தொடக்கம் O/L வரை ஆங்கில வகுப்புகள் (இலக்கியம் உட்பட) நடைபெறுகின்றன. A/L 2003, 2004 புதிய பிரிவுகள் 01.02.2002இல் ஆரம்பமாகவுள்ளன. தொடர்பு: J.அரியரட்ணம், 16, சோமசுந்தரம் அவனியு, சுண்டிக்குளி. (97592)

## பயிற்சி வகுப்பு

மாசி 5இல் ஆரம்பம். ஒரு மாத காலத்தில் நீங்களும் வானொலி திருத்துநர் ஆகலாம். குறிப்பு: A/L இலத்திரனியல் உள்ளடக்கம். மேலதிக விவரம் அறிய R.G.கிருபாகரன் (படப்பிடிப்பாளர்), கல்லூரி வீதி, வட்டுக்கோட்டை. (97579)

## CLASSES

G.C.E. (O/L), A/L PERSONAL CLASSES CONDUCTED AT YOUR HOMES BY EXPERIENCED TUTOR INSTRUCTION MEDIUM ENGLISH/TAMIL. T.P: 2913, 3084. (022)

## A/L பௌதிகவியல் 2003/2004

பௌதிகவியல், இணைந்த கணிதம் பலவருட அனுபவம் பெற்ற ஆசிரியரினால் ஏராளமான பயிற்சிகளுடன் முழுப்பாடத்திட்டமும் மிகக் குறுகிய காலத்தில் முடிக்கப்படும். தனிப்பட்ட முறையிலும். தொடர்பு: R.பாலசுப்பிரமணியம், B.Sc. (Cey) Dip. in Ed., 17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (013)

## விற்பனைக்கு

3 பரப்புக் காணியில் சுற்று மதிலுடன் மின்சாரம், தண்ணீர் வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கு.கணேசலிங்கம், கலாசாலை வீதி, பாரதிபுலம், திருநெல்வேலி. (020)

மானிப்பாயில் சகல வசதிகளுடன் கூடிய வீடும் (2 1/2 பரப்புக் காணி), கிளிநொச்சியில் அரசினர் ஆஸ்பத்திரி முன்பாக (நகர மத்தியில்) சகல வசதிகளுடன் கடையும், காணியும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: வெள்ளியம்பலம் இரத்தினசிங்கம், ஆஸ்பத்திரி வீதி, மானிப்பாய். (97582)

## FOR SALE

COMPUTER - VIEW SONIC E-40 (MULTIMEDIA) WITH EPSON L.Q-300 24 PIN DOTMATRIX PRINTER AND FACIT - ENGLISH PORTABLE TYPE WRITER FOR SALE. CONTACT:- C.SIVALOGANATHAN, (59) 185/4, BROWN ROAD, JAFFNA. (97598)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, அரசாங்க திணைக்களத்தின் நிரந்தர உத்தியோகஸ்தரும், சிவந்த நிறமுள்ள, செவ்வாய் தோஷமற்ற, 1970இல் பிறந்தவருக்கு அழகான மணமகள் தேவை. படம், ஜாதகக் குறிப்புடன் விண்ணப்பிக்கவும். பொருத்தமற்றவை திருப்பி அனுப்பிவைக்கப்படும். (சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது) விள.இல.1436, மே/பா.உதயன். (97473)

## தவறிவிட்டது

இளவாலையைச் சேர்ந்த சண்முகநாதன் சுதாமதி என்பவரது தே.அ.அ., விசேட அ.அ.பிரதி (0905027367), பேர்ஸ் என்பன யாழ.இந்து மகளிர் கல்லூரி கண்காட்சியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் அல்லது சிவன் ஸ்ரோர்ஸ், பரமேஸ்வராச்சந்தி எனும் முகவரியில் ஒப்படைக்கவும். T.P:3370. (023)



கடற்பரப்பில் பவனிவரும் "சமுத்திர தேவா" தனது சேவையைத் தொடர்ந்தும் வழங்கவேண்டும் என்று வாழ்த்துகின்றோம்.

**ஸ்பெஷல் இன்ஜினியேர்ஸ்**

ஊழியர்கள்,
8A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(019)


## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

கெருடாவில் விவேகானந்தா சனசமூக நிலையப் புனரமைப்புக்கரக ரூபா ஐந்து லட்சத்தை வழங்கியமைக்காகவும், கெருடாவில் கொண்டலடி ஆலய புனரமைப்புக்கு ஒதுக்கப்பட்ட மூன்று லட்சம் ரூபாவில், ஒரு லட்சத்து ஐம்பதினாயிரத்தை உடன் வழங்கியமைக்காகவும்,



வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார இந்து கலாச்சார முன்னாள் அமைச்சரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமாகிய

**திரு.K.N.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களையும்

பருத்தித்துறை, புலோலி பிரதேச சபைத் தலைவரும் வடமராட்சி ஈ.பி.டி.பி. அமைப்பாளருமாகிய

**திரு.ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன்**

அவர்களையும்,





வல்வை ஈ.பி.டி.பி. இணைப்பாளர்

**திரு.ச.யோகராசா**

அவர்களையும்

*மனப்பூர்வமாக நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

அத்துடன் 1964ஆம் ஆண்டு இந்நிலையத்தை ஸ்தாபித்த ஸ்தாபகராகிய திரு.முருகன் இரத்தினம அவர்களையும், திரு.சின்னவன் சிங்கராசா மற்றும் முற்போக்கு எண்ணம் கொண்ட கிராம ஆர்வலர்களையும்

*இதயபூர்வமாக நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

விவேகானந்தா ச.ச.நிலையம்,
கெருடாவில், தொண்டமனாறு.

(C-20506)



# அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோயில்

## புனராவர்த்தனப் பிரதிட்டா

# மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

## 01~02~2002

## கிரியா கால விபரம்

| ஆங்கில திகதி | தமிழ்ஆண்டு மாதம் திகதி | கிழமை | நேரம் | மணி | கிரியா நிகழ்ச்சி |
|---|---|---|---|---|---|
| 28.01.2002 | விஷு தை 15ஆம் நாள் | திங்கள் | காலை | 5.30 | கிரியாரம்பம், விநாயகர் வழிபாடு, புண்ணியாகம், தேவபிராமண அனுக்ஞை, திரவியசுத்தி, கணபதி ஹோமம். |
| | | | மாலை | 4.00 | பேரீதாடனம் கிராம சாந்தி, பிரவேச பலி, இரஷோக்ன திசா ஹோமம். |
| 29.01.2002 | விஷு தை 16ஆம் நாள் | செவ்வாய் | காலை பகல் | 8.00 | நவக்கிரகமகம், மிருத்சங்கிரகணம், வாஸ்துசாந்தி. |
| | | | மாலை | 5.00 | பிரசன்னாபிஷேகம், பிரார்த்தனையாக அங்குரார்ப்பணம், ஆச்சார்ய ரக்ஷாபந்தனம், யாகபரிவார பூஜை, கடஸ்தாபனம், கலாகர்ஷனம், கும்பயாகசால பிரவேசம, அக்கினி உத்பவம், தூபதாபனம். |
| | | | இரவு | 10.00 | கோவாசம், தீபஸ்தாபனம், செவ்வாய் பின்னிரவு புதன் அதிகாலை 5.00 மணிக்கு யந்திர ஸ்தாபனம, விம்பஸ்தாபனம், அஷ்டபந்தனம். |
| 30.01.2002 | விஷு தை 17ஆம் நாள் | புதன் | காலை | 8.00 | விஷேச சாந்தி, யாகசாலப் பிரவேசம், புண்ணியாகம், யாகபூஜை அக்கினி விபஜனம், விஷேச மாலா மந்திர காயத்திரி மந்திரஹோமம, பூர்ணாகுதி தீபாராதனை வேத தோத்திர தேவார பாராயணம்- பிரசாதம் வழங்குதல். |
| | | *புதன்* | *பகல்* | *12.00* | *மணிமுதல் மறுநாள் வியாழன் பகல் 2.00 மணிவரை பக்தர்கள் எண்ணைக்காப்பு சாத்துதல்.* |
| 31.01.2002 | விஷு தை 18ஆம் நாள் | வியாழன் | காலை | 8.00 | யாகபூஜை, பாவனாபிஷேகம், விஷேச திரவியஹோமம், தீபாராதனை, வேத தோத்திர தேவார பாராயணம், விபூதிப் பிரசாதம் வழங்குதல். |
| | | | மாலை | 4.00 | விம்பசுத்தி, கலஸ்தாபனம், பூஜை, ஜபம் யாகபூஜை, விஷேச ஹோமம், பூர்ணாகுதி, பஞ்சமுகார்ச்சனை, பிம்பசுத்தி, கௌதுகபந்தனம், பூர்வபச்சிம சந்தானம், யாக தீபாராதனை, வேத தோத்திர தேவார பாராயணம், நாதாஞ்சலி சமர்ப்பணம், விபூதப்பிரசாதம் வழங்கல், சிவாச்சாரியார், உதவிக்குருமார், சாதகர் இவர்களுக்கு உடை உத்தரீகம் வழங்கிக் கௌரவித்தல் சிற்பாசாரிமார் சம்பாவனை. |
| 01.02.2002 | விஷு தை 19ஆம் நாள் | வெள்ளி | காலை | 5.00 | புண்ணியாகம், யாக சங்கிரகன பூஜை, ஹோமம், மகாபூர்ணாகுதி, அக்கினி சம்யோகனம் தீபாராதனை, பஞ்சமுகார்ச்சனை, வேததோத்திரம், ஆசீர்வாதம், தேவாரம் ஓதுதல், நாதாஞ்சலி. |
| | | | காலை | 6.30 | தூபி அபிஷேகம் தொடர்ந்து பிரதான கும்பவீதிவலம், கர்பாவசன பிரவேசம், வேதாகம மூர்த்தி சம்போஜனம், கிரகப் பிரீதி. 07.06.- 9.30 வரை *மகாகும்பாபிஷேகம* மங்களதரிசனம். பிரார்த்தனை *எஜமான அபிஷேகம்* மகாபிஷேகம் தீபாராதனை *பக்தஜன ஆசீர்வாதம்*, விபூதிப்பிரசாதம் வழங்கல், ஆசியுரை. |
| | | | *பகல்* | | *மகேஸ்வரப் பூசை (அன்னதானம் வழங்கல்) நடைபெறும.* |
| | | | மாலை | | சாயரட்சைப் பூஜை உற்சவம். |

மகா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 48 நாள்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும்.

அடியார்கள் கலந்துகொண்டு அருள்பெறவேண்டுகின்றோம்.

*கும்பழாவளை,*
*அளவெட்டி.*

திருப்பணிச் சபை,
தர்மகர்த்தாக்கள் சபை.

(018)

பயங்கரவாதச் சட்டத்தின்கீழ் கைதானோருக்கு

# மனிதநேய அமைப்புகளின் ஒன்றியம் இலவச சட்ட உதவிகளை வழங்கும்

யாழ்ப்பாணம்,ஜன.28

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் படையினரால் கைதுசெய்யப்பட்டுச் சிறைகளில் இருப்போரின் வழக்குகள் தொடர்பாக இலவச சட்ட உதவிகளை வழங்குவதற்கு யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் முன்வந்துள்ளது.

கொழும்பில் உள்ள மனிதநேய அமைப்புகளின் ஒன்றியத்தின் ஆதரவுடன் இந்த இலவச சட்ட உதவி வழங்கப்படவுள்ளதாக இணையத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

கைதுசெய்யப்பட்டுச் சிறையில் இருப்போரின் பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களுக்கு இவ்வாறான சட்ட உதவி தேவைப்பட்டால் இலக்கம் 28, கோயில் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள இணையப் பணிமனையுடன் தொடர்புகொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி மற்றும் பச்சிலைப்பள்ளிப் பிரதேசங்களில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் உட்பட வடமராட்சியில் வசிப்போருக்கு மேற்படி உதவி தேவைப்பட்டால் பருத்தித்துறை வீதி, புலோலி எனும் முகவரியில் உள்ள 'ஊற்று' நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-10)

## குடும்ப நல மேற்பார்வையாளர் பயிற்சிநெறி

தெல்லிப்பழை பிராந்திய பயிற்சி நிலையத்தில் குடும்ப நல சேவை மேற்பார்வையாளர்களுக்கான பயிற்சி நெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சுகாதாரத் திணைக்களத் தலைமைப்பீடத்தின் அனுமதியுடன் செயற்படுத்தப்படும் இப்பயிற்சிநெறி கடந்த 16ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. மூன்று மாதங்களுக்கு இடம்பெறும் இப்பயிற்சியினை முடித்துக்கொண்டு வெளியேறும் இந்த மேற்பார்வையாளர் குழு பிராந்திய ரீதியாகக் கடமையில் ஈடுபடும் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-15)

நெடுந்தீவு உதவி அரச அதிபர் பிரிவில்

# அறநெறிப் பாடசாலைகளுக்கு பாடநூல் வழங்கும் நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம்,ஜன.28

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள இந்து அறநெறிப் பாடசாலைக்கான பாடநூல் வழங்கும் நிகழ்வு தைப்பூச தினமான இன்று திங்கட்கிழமை காலை 9மணிக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

நெடுந்தீவு மற்றும் ஊர்காவற்றுறைப் பகுதிகளுக்கான உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் யாழ்.அரச அதிபர் க.சண்முகநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அன்பளிப்பாக வழங்கிய பாடநூல்கள் மற்றும் நூலகத்துக்கான சமய நூல்கள் என்பன இந்த நிகழ்வில் வைத்து அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களிடம் கையளிக்கப்படும்.

நெடுந்தீவு மற்றும் ஊர்காவற்றுறை பகுதிகளுக்கான கலாசார உத்தியோகத்தர் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார். (ம-7)

## ஆண்டு விழா

யாழ்ப்பாணம்,ஜன.28

வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தின் 150ஆவது ஆண்டு நிறைவுவிழா அடுத்தமாதம் 9ஆம் திகதி காலை 9மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆறுமுகநாவலரின் திருவுருவச் சிலையைத் திறந்துவைத்தல், 150 ஆவது ஆண்டு நிறைவு மலர் வெளியீடு, விசேட விரிவுரைகள், மாணவர்களின் கலை நிகழ்வுகள் நிறைவு நாளின் நிகழ்வுகளாக இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

## சைவநெறித் தேர்வு முடிவுகள் வெளியாகின

யாழ்.சைவபரிபாலன சபையினரால் கடந்த வருடம் நவம்பர் மாதம் நடத்தப்பட்ட சைவநெறித் தேர்வின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

பரீட்சைப் பெறுபேறுகள் அனைத்தும் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் -

இதுவரை பரீட்சைப் பெறுபேறுகள் கிடைக்கப்பெறாத அதிபர்கள் தம்முடன் தொடர்பு கொள்ளலாம் என்றும் - சைவபரிபாலன சபையின் பரீட்சைச் செயலர் அறிவித்துள்ளார்.

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,ஜன.28

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தினால் நடத்தப்பட்ட சிவபுராண மனனப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு இன்று காலை 10 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பரிசு பெற்றோர் விவரம் வருமாறு:- செல்வி இ.நதியா (முதலாம் பரிசு), செல்வன் வி.யதுஷன் (இரண்டாம் பரிசு), செல்வன் ஜெ.சஞ்சீவன் (மூன்றாம் பரிசு). (ம-7)

★ ★ ★

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் பரிசளிப்பு வைபவமும் வருடாந்தப் பொதுக்கூட்டமும் இன்று காலை 9மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

சம்பிரதாய நிகழ்வுகளைத் தொடர்ந்து காலை 9.30 மணிக்கு யாழ்.மாவட்ட முன்னணிக் கரப்பந்தாட்ட வீரர்களின் காட்சிப் போட்டியும் தொடர்ந்து பரிசில் வழங்கல் நிகழ்வும் இடம்பெறும்.

இறுதியாக முற்பகல் 11 மணியளவில் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நடைபெறும்.(ம-10-ரி)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜன.28

தெல்லிப்பழை அருள்மிகு காசி விநாயகர் ஆலயத்தில் இன்று திங்கள் தைப்பூசம் நடைபெறவுள்ளது.

இன்று அஷ்டோத்தரசத சங்காபிஷேகமும், விசேட ஆராதனைகளும் இடம்பெறும். நாளை ஸ்நபன அபிஷேகம், திருவூஞ்சல் என்பன இடம் பெறும். (ம-7)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜன.28

கொக்குவில் கிழக்கு ஞான வைரவர் கோயில் கும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. (ம-7-ரி)

★ ★ ★

குருநகர்,ஜன.28

குருநகர் புதுமை மாதா ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா ஆராதனைகள் கடந்த வெள்ளிக்கிழமை 6.15 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளன.

அடுத்த மாதம் 2ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.15 மணிக்கு மெழுகுவர்த்தி வழிபாடும் தொடர்ந்து அன்று மாலை 5.00 மணிக்கு நற்கருணை வழிபாடும் நடைபெறும்.

மறுநாள் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 5 மணிக்கு முதற் திருப்பலி இடம்பெறும். தொடர்ந்து காலை 7.00 மணிக்கு திருநாட் திருப்பலி யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் தலைமையில் இடம் பெறும். (ம-51)

★ ★ ★

நவாலி,ஜன.28

ஆனைக்கோட்டை நாரவராகாடு புற்கைதின்னிப் பிள்ளையார் கோயிலின் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன பஞ்சகுண்ட மகா கும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை காலை 7.46 மணி முதல் 8.01 மணி வரையுள்ள சுபவேளையில் இடம்பெறும்.(ம-100)

★ ★ ★

தென்மராட்சி,ஜன.28

மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலயத்தில் தைப்பூச உற்சவம் இன்று திங்கட்கிழமை சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளதாக ஆலய நிர்வாகிகள் தெரிவித்தனர்.

இடம்பெயர்வு காரணமாக கடந்த வருடம் இவ்வுற்சவம் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-117)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜன.28

பீளைப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களின் உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 31ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு புலோலியில் இயங்கும் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச மட்டத்திலான விளையாட்டுப் போட்டி நடத்துவது குறித்து இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்படவிருப்பதால் விளையாட்டுக்கழகங்களின் தலைவர், செயலாளர்கள் கலந்துகொள்ளவேண்டுமென பளை விளையாட்டு உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (ஐ-7)

★ ★ ★

யாழ்பல்கலைக்கழக விளையாட்டு அணிகளில் அங்கம் வகிப்பவர்களுக்கான கலந்துரையாடல் நாளை மாலை 3.30மணிக்கு வர்த்தக விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-ரி)

★ ★ ★

யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்க நிர்வாகசபை உறுப்பினர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு சங்க அலுவலகத்தில் நடைபெறவுள்ளதாக சங்கத் தலைவர் வே.மணிமாறன அறிவித்துள்ளார்.

இதேவேளை, தகுதிகாண் ஆசிரியர் நியமனத்திலுள்ள பட்டதாரிகளுக்கான கலந்துரையாடல் ஒன்றும் அன்று காலை 10 மணிக்கு திருநெல்வேலி மாரியம்மன் வீதியிலுள்ள சங்க அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (ம-9)

★ ★ ★

வடமராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றுபவர்களுக்கு இன்று காலை 10 மணிக்கு அவசர கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது. புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில் அனைத்து தொண்டர் ஆசிரியர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-6)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜன.28

அகவொளி குடும்ப வளத்துணை நிலையத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றுவரும் முழுநிலாக் கருத்தரங்குத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு "உறவுகளில் தொடர்புகள்" என்ற கருப் பொருளில் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம், பாங்சால் வீதி, இல.131இல் அமைந்துள்ள அகவொளி குடும்பவளத்துணை நிலையத்தில் நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் அருட்தந்தை எஸ்.டேமியன் அவர்கள் கருத்துரையாற்றவுள்ளார். ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து பயன்பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-6)

★ ★ ★

யாழ்.இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றுவரும் முழுநிலா நாள் கருத்தரங்கு இன்று பிற்பகல்3.30 மணிக்கு குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் "உயிரினங்களில் குளோனிங்" என்ற கருப்பொருளில் ஈ.குகானந்தன் மற்றும் ரி.ஜெயந்தன் ஆகியோர் கருத்துரையாற்றவுள்ளனர். (ம-6)

★ ★ ★


யாழ்மாவட்ட வங்கியாளர் சங்கத்தின் அனுசரணையுடன் இலங்கை வங்கியாளர் நிலையத்தின் கல்விப் பகுதிப் பணிப்பாளர் ஆர்.வில்லவராஜா வங்கித்துறை, நிதித்துறை சார்ந்த வழிகாட்டல் கருத்தரங்கு ஒன்றை நடத்துகின்றார்.

இன்று காலை 9.30மணிக்கு யாழ்.கொமர்ஷல் வங்கிக்கு அருகில் உள்ள யாழ்ப்பாணக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் இக்கருத்தரங்கில் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொண்டு பயன்பெறுமாறு யாழ்.மாவட்ட வங்கியாளர் சங்கம் கேட்டுள்ளது. (ம-8)

★ ★ ★

சமூகவிஞ்ஞான படிப்பு வட்டத்தின் வலி.மேற்கு மையம் ஏற்பாடு செய்துள்ள "சமூகவிஞ்ஞானமும் மக்கள் வாழ்வும்" என்ற பொருளிலான கருத்துரை இன்று காலை 9.30 மணிக்கு சங்கானை பிரதான வீதியில் உள்ள கணனிக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. "தாயகம்" சஞ்சிகை ஆசிரியர் க.தணிகாசலம் நிகழ்வில் கருத்துரை நிகழ்த்துவார். (ம-7)

# கல்விச்சாலைக் காட்சிகள்



மானிப்பாய் சிறுவர் பூங்கா முன்பள்ளி விளையாட்டுப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் கடந்தவாரம் இடம்பெற்றன.


சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட மானிப்பாய் பிரதேச சபை ஆயுர்வேத டாக்டர் திருமதி வைத்திலிங்கம் சிறிதேவி, செல்வன் லோ.பிரவின் என்பவருக்கு பரிசில் வழங்குவதையும் அருகில் முன்பள்ளி ஆசிரியை திருமதி எஸ்.பிரபாகரன் நிற்பதனையும் படத்தில் காணலாம். (ம-185)



கரவெட்டி ஞானசாரியார் கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழக மெய்யியற்துறைத் தலைவர் பேராசிரியர் நா.ஞானக்குமாரன் தம்பதிகள், சிறப்புவிருந்தினராகக் கலந்துகொண்ட கரவெட்டி கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.அம்பலவாணர், அதிபர் வி.சிவசிதம்பரத்தினால் வரவேற்கப்படுவதைப் படத்தில் காணலாம். (ம-173)



புன்னாலைக்கட்டுவன் அ.த.க.பாடசாலையில் சவுக்கு மரம் நடும் விழாவின்போது மேற்படி பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் அ.துரைராஜா அவர்கள் மரம் நடுவதையும், அருகில் அதிபர் சி.மணியம், முன்னாள் அதிபர் ஆ.சி.நடராஜா, சமூக சேவையாளர் ஜே.பி.தர்மலிங்கம் மற்றும் பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் ஆகியோரையும் படத்தில் காணலாம். (ம-133)



நெல்லியடி சனசமூகநிலைய சன்மார்க்க சபைப் பாலர் பாடசாலை மாணவர்களின் வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் அதிபர் சி.நற்குணலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட வடமராட்சிக் கல்விவலய ஆரம்பக் கல்விக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.கமலானந்தன் அவர்கள் முதற்பரிசு பெற்ற மாணவர்களில் ஒருவரான மாதுளா கிருஷ்ணசிங்கத்திற்குப் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (ம)

## 6ஆம் ஆண்டு நினைவலைகள்



திருமதி

### அன்னலட்சுமி இராசையா

மண்ணில் மழலையாக 03.03.1931 — விண்ணில் தாரகையாக 03.02.1996

திதி:28.01.2002 (தைப் பௌர்ணமி)

பூவுலகில் நீங்கள் வாழ்ந்த காலத்தில்,
எமக்கெல்லாம் நல்வழி காட்டி
நல்லதையே நினைத்து நல்லதையே செய்து,
நானிலம் போற்றும் வகையில் வாழ வழிகாட்டிய
- அன்னையே!

இன்று வானுலகில் தெய்வத்துடன் இணைந்து,
பூவுலகிற்கே நன்மை புரிகின்றீரோ,
ஆண்டு ஆறு அல்ல யுகம் ஆறு சென்றாலும்,
தங்களின் பாதையிலே தொடர்வோம் அம்மா!

தங்களின் நினைவைப் பசுமையாய்ப்
போற்றி மற்றுமோர் ஆண்டில்
நினைவலைகளை மீட்டிப் பார்க்கும்:
- கணவன், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர், நண்பர்கள்.

'அன்லட்சுமி வாசா',
மாத்திரா வளவு,
வல்வெட்டி,
வல்வெட்டித்துறை.

(97600)

## இடைக்கால வரவு - செலவுத் திட்டம் 5ஆம் திகதி

அரசாங்கத்தின் இடைக்கால வரவு செலவுத் திட்டம் எதிர்வரும் 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றது.

எதிர்வரும் மார்ச் மாதம் 18ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் மாதம் 19ஆம் திகதி வரையிலான காலப் பகுதிக்குரிய நிதி ஒதுக்கீடுகள் இதில் இடம்பெறவிருக்கின்றது என்று அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-4)


## மக்கள் வங்கியின் விசேஷ அறிவித்தல்

1984ஆம் ஆண்டிற்கு முன்
அடகு வைத்து இதுவரை மீட்கத்
தவறிய வாடிக்கையாளர்களுக்கு
மீண்டும் ஒரு சந்தர்ப்பம்

பெரும் எண்ணிக்கையான வாடிக்கையாளரின் அன்பான கோரிக்கைக்கு இணங்க, 31-12-2001 வரை கொடுக்கப்பட்ட காலக்கெடு 31-03-2002 வரை நீடிக்கப்பட்டுள்ளது. எனவே இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, மீட்கத் தவறிய நகைகளை மீட்டுக்கொள்ளுங்கள். முதல் அளவே வட்டி அறவிடப்படும். அடகுச் சீட்டை தவறவிட்டவர்கள்/இறந்தவர்களின் உரிமைக் காரர்கள் எந்த மக்கள் வங்கிக் கிளையில் அடகு வைக்கப் பட்டதோ அந்தக் கிளை முகாமையாளரோடு தொடர்புகொண்டு 31-03-2002க்கு முன் பணத்தைக் கட்டி நகைகளை மீட்டுக் கொள்ளுங்கள். இச்சந்தர்ப்பத்தை நழுவவிடாதீர்கள்.

பிரதேச முகாமையாளர்
மக்கள் வங்கி,
பிரதேச தலைமைக் காரியாலயம்,
யாழ்ப்பாணம்.

(C/20473)


## நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
## புதிய மரக்கலம் "சமுத்திர தேவா" பூம்புனல் வெள்ளோட்ட விழா இன்று

**பெருமை மிகு எம் தீவக மக்களே! கூட்டுறவாளப் பெருமக்களே!!**

மக்களின் சேவை இயக்கமாக மிளிரும் எம் தீவகத்தில் பல நோ.கூ.சங்கம் அங்கத்தவர்கள் நலன்கருதி, அங்கத்தவர்கள் தேவையை அறிந்து சேவையாற்றி வருவதையும், தனது வளமான சேவைப் பிரிவுகளில் ஒன்றான கடல் பிரயாண சேவையையும், ஏனைய சேவைகளையும் சிறப்புற நடத்தி அங்கத்தவர்களின் நலன்களைப் பேணிக்காத்து வருகின்றது என்பதையும் அங்கத்தவர்கள் அறிவார்கள். இந்தச் சேவையை வலுவுடையதாகவும் சிறப்புடையதாகவும் விருத்தி செய்யும் நோக்கோடும் தற்போது கடல்பிரயாண சேவையிலுள்ள "உதயதாரகை" என்னும் படகு பல வருடங்கள் கடலாடி தன் வலுவிழந்தமையாலும் காலத்துக்காலம் இப்படகு செப்பனிடப்படுவதால் ஏற்படும் பாரிய செலவினத்தைக் கருத்தில் கொண்டு எமக்குப் பயம் காட்டும் இந்துமா கடலை எதிர்த்துச் செல்லக்கூடிய ஒரு வலுவாய்ந்த புதிய படகு ஒன்றைக் கட்டவேண்டும் என்ற அவசியம் உணரப்பட்டது. 1998ஆம் ஆண்டு இருந்த இயக்குநர் சபை இப்பாரிய முயற்சிக்கு கால்கோள் இடத்தொடங்கியது. சங்கத்தின் நிதி வளம் இடர்ப்பாடாய் இருந்தமையால் பொதுநலனுக்காக உதவி வழங்கும் உலக நிறுவனமான யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தை அன்றைய இயக்குநர்கள் அணுகியபோது, படகு கட்டுமானத்துக்காக ரூபா 4,95,000 /= நன்கொடையாக வழங்கியது. இவ் உதவுத் தொகையைக் கொண்டு படகு கட்டுமான வேலைக்கு ஏராவுக்குரிய மரமும், சிறுதொகைப் பலகைகளும் கொள்வனவு செய்யப்பட்டன.

### தீர்க்கமான முடிவு

அந்த ஆண்டு மார்கழி மாதம் 7ஆம் திகதி புதிய படகுக்கான ஏரா ஓடுதல் சாஸ்திரமுறைப்படி படகு வடிவமைப்பாளரான வல்வெட்டித்துறையைச் சேர்ந்த **திரு.கு.நகுலராசா** அவர்களினால் நிறைவேற்றி வைக்கப்பட்டது. ஆயினும், ஏரா ஓடுதலுடன் படகின் கட்டுமான வேலைகள் தடைப்பட்டுக் கிடந்த வேளையில் 1999ஆம் ஆண்டு 8ஆம் மாதம் 7ஆம் திகதி சங்கத்தின் புதிய நிர்வாகத்தைப் பொறுப்பேற்றுக்கொண்ட நாம் எல்லாவற்றையும்விட படகின் கட்டுமானப் பணிக்கு முன்னுரிமை கொடுத்து, படகைக் கட்டி ஓராண்டுக்குள் சேவையாற்ற விட வேண்டும் என்ற தீர்க்கமான முடிவை நாம் எடுத்துக் கொண்டோம்.

### அங்குரார்ப்பணம்

இத்தீர்மானத்துக்கு அமைவாக 2001ஆம் ஆண்டு இதே தைப் பூசத் திருநாளில் என் தீவக மண்ணின் மைந்தரும் எமது உதவி அரசாங்க அதிபருமாகிய **ஜெ.எக்ஸ்.செல்வநாயகம்** அவர்கள் வருகை தந்து படகின் அணியக்கட்டையைப் பொருத்தி கட்டுமானப் பணிகளை அங்குரார்ப்பணம் செய்துவைத்தார்.

படகின் கட்டுமானப் பணியில் பாரிய வேலைப்பாடு கொண்டது உடல் கூட்டை வடிவமைத்து பொருத்துவது. உடல்கூட்டை பொருத்துவதற்கான வங்கு வேப்ப மரங்களைத் தேர்ந்து தெரிவுசெய்து, சேகரித்து கட்டுமான தளத்தில் எடுத்துவரவேண்டியது மிகச்சிரமமான பணி. எனினும் இரவு, பகல், வெயில், மழை, வீடு வாசல், உணவு, உறக்கம் என்ற நினைவின்றி வீடுகளுக்கு வங்குக்கான வேப்ப மரங்களை வாங்கச் சென்ற போது எம் மக்கள் எமக்களித்த பங்களிப்பு மிக மிக மகத்தானது. அத்துடன் பங்காளிகளின் எதிர்ப்புக்களை எதிர்கொண்டபோது அனைத்து எதிர்ப்புக்களையும் அரவணைத்து பெறுமதி வாய்ந்த மரங்களைக் குறைந்த பெறுமதியில் தந்துதவியமையை நாம் மறப்பதற்கில்லை.

### அகமகிழ்ந்து அன்பளிப்பு

மக்கள் அளித்த பேருதவியால் மிகவிரைவாக வங்குகளுக்கான வேப்ப மரங்கள் சேகரிக்கப்பட்டன. தலைவர் **திரு.நா.சங்கரப்பிள்ளை** அவர்கள் தமது சொந்த அலுவல் காரணமாக தமது பதவியில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டு சென்றதால் சங்கத்தின் உபதலைவராக இருந்த எனக்கு தோளில் சுமை தலைக்கேறியது. படகு பாரத்தை இறக்கினால் அன்றி தலைமையில் இருக்கும் சங்கத்தின் நிர்வாக சுமையைக் காப்பாற்ற முடியாது என்ற திணறல் ஏற்பட்டது. நிதி நிலையும் என் மனதை மேலும் நெருக்கியதால் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், முன்னாள் அமைச்சருமான **உயர்திரு.கே.என்.டக்ளஸ் தேவானந்தா** அவர்களை அணுகி படகு கட்டுமானத்திற்கு உதவி செய்யுங்கள் என்று கேட்டபோது இருபது லட்சம் ரூபாவை அன்பளிப்பாகத் தந்து உதவியதன் மூலம் படகின் நிர்மாண வேலைகள் தங்குதடையின்றி நடைபெற்றுக் கொண்டிருக்க, மறு முனையில் படகுக்கான இயந்திர வேலை 1980ஆம் ஆண்டுகளில் எமது சங்கத்தின் சேவையில் இருந்த "சமுத்திரா தேவி" என்னும் படகின் உடற்பகுதி சிதைவடைந்து போக கழற்றி வைக்கப்பட்டிருந்த அதன் இயந்திரம் பழுதடைந்த நிலையிலும், உதிரிப்பாகங்கள் தொலைந்து போன நிலையிலும் காணப்பட்டது. அவ்இயந்திரம் பல லட்சம் ரூபா செலவு செய்து புனரமைத்து இப் படகில் பொருத்தப்பட்டுள்ளது. ஏக காலத்தில் இரு வேலைகளும் சீராக நடைபெற்று ஓராண்டுக்குள் படகைக் கட்டி முடித்து வெள்ளோட்டத்திற்கு விடவேண்டும் என்ற எமது தீர்மானத்திற்கு அமைவாக எம் கடலில் கம்பீரத்துடன் தைப்பூசத் திருநாளாகிய இன்று கடலாடப் போகும் காட்சியைத்தான் இங்கு அழகுறக் காண்கின்றீர்கள்.

### வெள்ளோட்டம்

புதிய கோயில் ஒன்றைக் கட்டி கும்பாபிஷேகம் செய்வதும் புதிதாக மரக்கலம் ஒன்றைக் கட்டி வெள்ளோட்டம் விடுவதும் முழுக்கமுழுக்க சாஸ்திர ரீதியான கட்டுமானப் பணிகளாகும். மரக்கல நிர்மாணிப்பில் சாஸ்திர ரீதியாக 16 வகையான வடிவமைப்புக்கள் உண்டு என்று சொல்லப்படுகின்றது. அதில் ஒன்றான "மகர" வடிவில் கட்டப்பட்டதுதான் இன்று "பூம்புனல்" வெள்ளோட்டத்திற்கான புதுப்பொலிவு பெற்று பூமாலையுடன் நிற்கும் "சமுத்திர தேவா" என்னும் புதிய கடற்கலமாகும். இத்தருணத்தில் அங்கத்தவர்கள் உதவியாலும் எங்கள் பணிகளாலும் இந்தச் சாதனையை நாம் சாதித்துள்ளோம் என்பதை பெருமிதத்துடன் கூறிக்கொள்வதில் அகமகிழ்வடைகின்றோம்.

### நற்பணிக்கு நன்றி

இந்த அரும் பெரும்பணிக்கு நிதி வழங்கிய ஐ.நா.ஸ்தாபனத்தின் **யு.என்.எச்.சி.ஆர்.** நிறுவனத்தாருக்கும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், முன்னாள் அமைச்சருமான மாண்புமிகு **திரு.கே.என்.டக்ளஸ் தேவானந்தா** அவர்களுக்கும் மனநிறைவான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

மரக்கலத்தை வடிவமைத்து அற்புதமாக நிர்மாணித்துத் தந்த மரக்கல கட்டுமான விற்பன்னர் **திரு.கு.நகுலராசா** அவர்களுக்கும், அவரின் உதவியாளர்களுக்கும், இயந்திரத்தைப் புதுப்பித்து உருவாக்கம் செய்துதந்த இயந்திர தொழில்நுட்பவியலாளர் **திரு.த.மூர்த்தி** அவர்களுக்கும், அவரின் உதவியாளர்களுக்கும் மனமகிழ்வுடன் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். இந்தப் பெரும் முயற்சிக்கு என்னுடன் இணைந்து செயற்பட்ட **இயக்குநர்களுக்கும், பொதுச் சபையினருக்கும்** இந்தச் சாதனையைச் சாதிப்பதற்கு நிர்வாக ரீதியாக பணியாளர் நிலையிலும் நின்று பெறுமதிவாய்ந்த நிறைவான பங்களிப்பினை அளித்த சங்கத்தின் பொது மேலாளர் **திரு.இரா.தர்மலிங்கம்** அவர்களுக்கும், சங்கக் கணக்காளர் **திரு.க.கோபாலபிள்ளை** அவர்களுக்கும் ஏனைய **சங்கப் பணியாளர்களுக்கும்** எமது மனநிறைவான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

இப்பாரிய பெரும் முயற்சிக்கு தோன்றாத் துணையாக நின்று எமக்கு ஊக்கமும், உறுதுணையும் தந்த **யாழ்.அரச அதிபர்** அவர்களுக்கும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்டப் பிரதி அமைப்பாளரும், நல்லூர் பிரதேச சபைத் தலைவரும் ஆகிய **திரு.க.மணிபல்லவராஜன்** அவர்களுக்கும், எம் **தீவகத்தின் உதவி அரசாங்க அதிபருக்கும், கூட்டுறவுஅபிவிருத்தி உதவி ஆணையாளர்களுக்கும், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும்,** ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினருக்கும் எம் தீவகத்தின் கூட்டுறவாளர் பெருமக்களுக்கும், மரக்கலத்திற்குத் தேவையான இலுப்பை, தேக்கு, மா, பலா, வாகை போன்ற மரப்பலகைகளை எமக்கு நியாயமான பெறுமதியில் வழங்கி பல வழிகளிலும் எமக்கு உதவியமைக்காக அங்குசபாச பிள்ளையார் மரக்காலை உரிமையாளர் **திரு.எம்.கணேசராஜா** அவர்களுக்கும் மனமகிழ்வுடன் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

*நெடுந்தீவு பல நோ.கூ.சங்கம்,*
*நெடுந்தீவு.*
2002-01-28

*சு.கணேசலிங்கம்,*
*தலைவர்,*
*பணிப்பாளர்கள்,*


"சமுத்திர தேவா"
இயந்திரப்படகு
வெள்ளோட்டம் சிறப்புற
அமையட்டும்!
எமது நல்வாழ்த்துக்கள்.
**S.V.முருகேசு**
154, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021-2991

நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணி
சிறக்கவும் "சமுத்திர தேவா" வெள்ளோட்டம்
சிறப்புறவும் வாழ்த்துகிறோம்
**இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்**
மிதிவண்டியும் உதிரிப்பாகங்களும், றேடியோ, ரீ.வி., டெக்.
இதரபொருள்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.
50, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021-2988
தொலைநகல் : 021-2868

கடற்பரப்பில் உலாவரும் "சமுத்திர தேவா"
பயணிகள் படகு வெள்ளோட்டம் சிறக்க
எமது இனிய நல்வாழ்த்துக்களைத்
தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம்.
என்றும் "**அண்ணா**" தயாரிப்புகளை
வாங்கிப் பாவியுங்கள்!
**அண்ணா தொழிலகம்**
இணுவில்,
யாழ்ப்பாணம்.

சமுத்திரத்தில் பவனி வரும்
"சமுத்திர தேவா"
இயந்திரப் படகு வெள்ளோட்டவிழா
சிறப்புற எமது நல்வாழ்த்துக்கள்!
**அம்பிகை களஞ்சியம்**
304 (110), மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

அலைகளின் மத்தியில்
அழகுப் பவனிவரும்
"சமுத்திர தேவா"
படகு வெள்ளோட்டம்
சிறக்கட்டும்!
**குகன் ஸ்ரோர்ஸ்**
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(C-20499)

உ

# தைப்பூசத் திருவிழாவும் அன்னதானமும்

யாழ். சிறைச்சாலை இந்து ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் தைப்பூசத் தினமான இன்று கோட்டை முனியப்பர் ஆலயத்தில் விசேட திருவிழாவும், அன்னதானமும் இடம்பெறவுள்ளன.

பொதுமக்கள் இந்த நிகழ்வில் கலந்து முனியப்பரின் அருளைப் பெறுவதுடன் அன்னதானத்திலும் பங்குபற்றுமாறு வேண்டுகின்றோம்.

இந்து ஊழியர் சங்கத்தினரும்,
யாழ். சிறைச்சாலை. உத்தியோகத்தர்களும். (C/அ)

---

யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்க
ஆதரவுடன்
யாழ்.மருத்துவபீட 4ஆம் வருட மாணவர்களின் ஏற்பாட்டில்

**சங்க உறுப்பினர்களுக்கு**
**இலவச மருத்துவப் பரிசோதனைகளும்**
**ஆலோசனைகளுடன் தடுப்பூசியும்**
**வழங்கப்படவுள்ளன**

இரத்தப் பரிசோதனைகள்:
**டாக்டர் இ.சங்கர்**
*(யாழ். இரத்த வங்கி பொறுப்பதிகாரி)*
**திரு.K.நக்கீரன்**
*(பாலியல் நோய்த்தடுப்பு, பொதுச் சுகாதாரப் பரிசோதகர் யாழ். போதனா வைத்தியசாலை)*

கண் பரிசோதனைகள்:
**றெனி மூக்குக் கண்ணாடி அக ஸ்தாபனத்தினர்**
*இல. 540, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.*

இவர்களுடன் யாழ்.மாநகர சபை, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்
**நா.ரகுமார்**
*அவர்களும் கலந்துகொள்ளவுள்ளார்.*

எனவே, சங்க உறுப்பினர்கள் அனைவரும் 30.01.2002 புதன்கிழமை காலை 8.00 மணிக்கு சங்கக் காரியாலயத்துக்கு சமுகம் தந்து சந்தர்ப்பத்தைத் தவறவிடாது பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.30, நவீன சந்தை மேல்மாடி,
யாழ்ப்பாணம். (038)
**அ.அல்பேட்**
செயலாளர்.

---

# முதியோர் இல்லம் மீண்டும் கைதடியில்

யாழ்ப்பாணம்,ஜன.28

போர்ச் சூழல் காரணமாக இடம்பெயர்ந்த கைதடி அரசினர் முதியோர் இல்லம் மீண்டும் சொந்த இடத்தில் இயங்கத் தொடங்கியுள்ளது.

தென்மராட்சிப் பகுதியில் பெரும் போர்ச் சூழ்நிலை ஏற்பட்டதை அடுத்து இந்த முதியோர் இல்லம் தற்காலிகமாக மூளாய்ப் பகுதியில் செயற்பட்டு வந்தது.

கைதடிப் பகுதியில் தற்போது மீள்குடியமர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதையடுத்து நேற்று முன்தினம் முதல் கைதடி சாந்தி நிலையத்தில் மீண்டும் அரசினர் முதியோர் இல்லம் செயற்படத் தொடங்கியுள்ளது. (ஒ)

## கவுணாவத்தைக்கு பக்தர்கள் செல்ல அனுமதி

யாழ்ப்பாணம்,ஜன.28

கருகம்பனை கவுணாவத்தை வைரவர் ஆலயத்தில் இன்று இடம்பெறும் தைப்பூசத் திருவிழாவில் பக்தர்கள் பங்குபற்ற படையினர் அனுமதிவழங்கியுள்ளனர்.

சேந்தாங்குளம் சோதனைச் சாவடியூடாக இன்று காலை 9மணிமுதல் பக்தர்கள் செல்லமுடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஜ-3)

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம்,ஜன.28

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை தட்டாதெரு கலாஜோதி மைதானத்தில் அமைந்திருக்கும் சிவயோக முனீஸ்வரர் ஆலய சம்புரோச்சன பிராயச்சித்த மகா கும்பாபிஷேகம் இன்று காலை 9.30இற்கு இடம்பெறவுள்ளது. (ஜ-3)

## ஊர்காவற்றுறையில் ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

காரைநகர்,ஜன.28

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் ஊர்காவற்றுறை, நெடுந்தீவுப் பகுதிகளுக்கான உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ்.செல்வநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

(ஒ-73)

## நால்வருக்கு கௌரவ விருது

யாழ்ப்பாணம்,ஜன.28

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நால்வருக்கு கௌரவவிருது வழங்கும் நிகழ்வு இன்று மாலை 4 மணிக்கு ஆதீன கலா மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.அரச அதிபர் க.சண்முகநாதன், யாழ்பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம், புனர்வாழ்வு அதிகாரசபை வதிவிடப் பொறியியலாளர் ப.கிரிதரன் ஆகியோர் கௌரவ விருது பெறுகின்றனர். (ஜ-3)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
1952
-
12
-
25



உதிர்வு
2001
-
12
-
29

அமரர்
### சின்னத்தம்பி தனபாலசிங்கம்
*(உரிமையாளர், ஞானவைரவர் லொறி 42–1032)*

இறைவன் திருவடி நிழலில் நித்திய ஆறுதல் தேடிய அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் மரணச் செய்திகேட்டு ஓடோடி வந்து, எமக்கு உதவி செய்த அயலவர்கள், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளம் நெகிழ்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்வதுடன், இன்று (28.01.2002) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*"திருத்தணிகை"*
*61/2,நல்லூர் குறுக்கு வீதி,*
*யாழ்ப்பாணம்.* (043)

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
தந்தை.

---

## பிற்போடப்பட்டுள்ளது

யாழ். நகர்மைய றோட்டரக்ட் கழகத்தினால்
சமூகவளர்ச்சி நிதிக்காக
நாகம்ஸ் திரையரங்கில் இன்று (28.01.2002)
ஏற்பாடு செய்யப்பட்டிருந்த
திரைப்படக் காட்சி தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்பதை மனவருத்தத்துடன் அறியத்தருகின்றோம்.

யாழ். நகர்மைய
**றோட்டரக்ட் கழகத்தினர்.**
(042)

---

## வேலையாள்கள் தேவை

*பாடசாலை, அச்சக உபகரணங்கள் விற்பனை செய்யும் நிறுவனத்திற்கு அதில் அனுபவம் உள்ள கணக்காளர், விற்பனையாளர்கள், சிட்டை எழுதுநர்கள் ஆகியோர் தேவை.*

சான்றிதழ்களின் பிரதிகளுடன் விண்ணப்பிக்கவும்.
விள.இல. 1440,
மே/பா.உதயன்.
(014)

---

## கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர் பதவி

கடந்த 19.01.2002இல் மேற்படி பதவிக்காக நேர்முகப் பரீட்சையில் தோற்றி தெரிவுசெய்யப்பட்ட அனைவரையும் இன்று 28.01.2002 காலை 11.00 மணிக்கு எங்கள் அலுவலகத்துக்கு சகல ஆவணங்களுடனும் நேரில் சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*குறிப்பு:-* 01.02.2002இல் இருந்து கடமையைப் பொறுப்பேற்க வேண்டும்.

(C/20516) பாதுகாப்பு முகாமையாளர்.

---


நெடுந்தீவு ப.நோ.கூ. சங்கம்

# படகு வெள்ளோட்ட விழா




நெடுந்தீவு ப.நோ.கூ. சங்கம் நெடுந்தீவு மக்களுக்கு செய்து வரும் சேவைகள் பல.
அவ்வகையில் மற்றுமோர் அத்தியாவசிய சேவையான
போக்குவரத்து பிரச்சனையை தீர்க்கும் பொருட்டு
புதிய படகு ஒன்றினை அமைத்து இன்று வெள்ளோட்ட விழா
காண்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம்.

வாழ்த்துபவர்கள் ....



**ANGUSA PASA PILLIAR TIMBER DEPT**
Sawn Timber Suppliers and Saw Mill
537, K.K.S Road, Jaffna.

**G. Group Contractor**
BUILDING CONSTRUCTION, TIMBER WORKS
&
SAWN TIMBER SUPPLIER
*509, K.K.S. Road, Jaffna.*

---

## மருந்தகம் ⊕ மருத்துவ ஆய்வுகூடம்
### திறப்பு விழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விஷு வருஷம் தைத்திங்கள் 15ஆம் நாள் இன்று (28.01.2002) திங்கட்கிழமை நண்பகல் 12.40 – 1.10 மணிவரையில் வரும் பௌர்ணமி திதியும் பூச நட்சத்திரமும் கூடிய சுப நல்வேளையில்

**நெஸ்கோ ⊕ NESCO ⊕**

என்னும் ஸ்தாபனத்தை இல.32, ஆடியபாத வீதி, திருநெல்வேலி சந்தையடியிலும் இன்று பிற்பகல் 3.06 – 3.36 மணிவரையான சுப நல்வேளையில்

**மெடிக்ஸ் ⊕ MEDEX**

என்னும் ஸ்தாபனத்தை இல.448, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்திலும் இரு நிறுவனங்களை இறைவன் திருவருள் துணையுடன் திறந்து ஆரம்பிக்கவுள்ளோம். அத்தருணம் எமது அன்பர்கள், நண்பர்கள், உற்றார், உறவினர்கள், வாடிக்கையாளர்கள், மருந்தக உரிமையாளர்கள் அனைவரும் குடும்ப சகிதம் வருகைதந்து, விழாவைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தயவுசெய்து இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.

லயன் க.மு.பத்மநாதன் குடும்பத்தினரும் 'WESCO' ஊழியர்களும்.

(040)

உ
சிவமயம்

உங்கள் அபிமானத்துக்குரிய ராம் பிறின்ரேஸ் ஸ்தாபனத்தார் ஓவ்செற் பிறின்டிங் ஸ்கிறீன் பிறின்டிங் மூலம் தமது சேவையை மேலும் விஸ்தரிக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

பதிப்பு சம்பந்தமான அனைத்து தேவைகளையும் தரமான முறையில் நிறைவுசெய்து பெற்றுக்கொள்ள ஓர் தனித்துவமான நிறுவனம்

**ராம் பிறின்ரேஸ்**
**RAM PRINTERS**

51,பலாலி வீதி,(இலுப்பையடிச் சந்தி) யாழ்ப்பாணம்.
(எமக்கு வேறு கிளை நிறுவனம் இல்லை)

**CHEMISTRY CENTRE**

53, பலாலி வீதி, கந்தர்மடம்

A/L 2004

இன்று Chemistry ஆரம்பம்.
Che.: Mon., Fri.
4.00 - 5.00p.m.
Che.: திரு.அன்பு
C.Maths: திரு.செந்தில்
Phy.: திரு.கருணாநிதி
Bio: திரு.தற்பரன்
Biology ஆரம்பம்
31.01.2002 5.00 p.m. (026)

**NEW SCIENCE COLLEGE**

**PHYSICS**

2004
பொறியியல
ஆரம்பம் : 29.01.2002
செவ்.,வியா.: 4 - 5

2003
மின்புலம்
ஆரம்பம்: 29.01.2002
செவ்.,வியா.: 5 - 6

By: R.குகன் (B.Sc.)
(97531)

## எல்லே போட்டி

வலிமேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களிடையேயான எல்லே விளையாட்டு சுற்றுப் போட்டி இன்று காலை 8.30 மணிக்கு அராலி மாவத்தை விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு அமைச்சர் அங்கு தெரிவித்தார்.

அதன்பின்னர் அங்கிருந்து திரும்பிய அமைச்சர் திருகோணமலை நகரில் பல இடங்களுக்குச் சென்றார். நேற்றிரவு கடற்படையினர் அளித்த விருந்தில் அவர் கலந்துகொண்டார்.
(ஐ-3-145-9)

## களுத்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாக சிறைச்சாலையில் இரு இடங்களில் பிள்ளையார், முருகன், லக்ஷ்மி ஆகிய தெங்வங்களின் சிலைகள் பிரதிஷ்டை செய்யப்பட்டன.

நேற்று நடந்த சமய வைபவத்தில் அங்குள்ள கைதிகளும், சிறைச்சாலை உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

இதேவேளை -

களுத்துறைச் சிறையில் உண்ணாவிரதம் மேற்கொண்டிருந்த ஒன்பது கைதிகளும் நேற்று தமது உண்ணாவிரதத்தைக் கைவிட்டனர். அவர்களின் விடுதலைக்கு ஏற்பாடு செய்வதாக இந்து விவகார அமைச்சர் உறுதிமொழி வழங்கியதை அடுத்தே போராட்டத்தைக் கைவிட்டனர்.(ஐ-3)

## அந்தியேட்டி அழைப்பு

எங்கள் குடும்பத் தலைவர் சிவலிங்கம் சிவநேசனின் வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை காலை 7 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

*சந்தனாஸ், வதிரி.* (C/20520) தகவல்:குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## கணபதிப்பிள்ளை மாணிக்கம்

மீசாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் தற்போது கரணவாய் தெற்கில் வசித்தவருமாகிய கணபதிப்பிள்ளை மாணிக்கம் 26.01.2002 அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவம் - சின்னம்மா ஆகியோரின் புத்திரியும், நாகம்மா, காலஞ்சென்ற செல்வம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கணபதிப்பிள்ளையின் துணைவியாரும் வசந்தகுமாரி (பவளம்), உதயகுமார் (இத்தாலி), சந்திரகுமார் (கனடா), ஜெயக்குமார் (இத்தாலி), ஆகியோரின் அன்புத் தாயாரும், கேதீஸ்வரன், கிருஷ்ணகுமாரி (இத்தாலி), பங்கையச்செல்வி (கனடா), மங்களேஸ்வரி (இத்தாலி) ஆகியோரின் அன்புமாமியாரும், துவாரகேதன், மேதுஜா, ஜனாத், யாழினி (இத்தாலி), ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27.01.2002 நடைபெற்று விட்டன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*தற்போதைய முகவரி:,*
*மூத்தவிநாயகர் கோவிலடி,*
*கரணவாய் தெற்கு,*
*கரவெட்டி.*

(C-20521)

தகவல்:
ந.கணபதிப்பிள்ளை
(கணவர்)
(ஓய்வு பெற்ற இ.போ.ச.பொறியியலாளர்)

## வேலுப்பிள்ளை தருமராசா

(ஓய்வுபெற்ற இ. போ. ச. உத்தியோகத்தர்)

துன்னாலை மத்தியைப் பிறப்பிடமாகவும் மனோகரா, அல்வாயை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை தருமராசா நேற்று காலமானார்.

அன்னார் சாந்தகுமாரியின் அன்புக் கணவரும் தயாழினி, ரமணன், காயத்திரி (வட இந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.01.2002) திங்கள் பிற்பகல் 2.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் அல்வாய் பங்குவேம்படி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

*மனோகரா,*
*அல்வாய்.*

(C-20522)

தகவல்:
குடும்பத்தினர்.

றோயல் எலக்ரோனிக், எலக்ரிக்கலின் மற்றுமொரு கிளை பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் இன்று (28.01.2002) திங்கட்கிழமை தொடக்கம் ஆரம்பிக்கப்படுகின்றது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

மற்றும் ஒரு கிளை ஸ்தாபனம் நெல்லியடியில்!

றோயல் எலக்ரோனிக் எலக்ரிக்கல்,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.

(C/20514)

றோயல் எலக்ரோனிக் எலக்ரிக்கல்,
பிரதான வீதி, பருத்தித்துறை.

**IIS இன் விசேட அறிமுகம்**

Technician Diploma in Radio, TV, Computer and Electronic Equipment Servicing

Based on City & Guilds - U.K
Fully Practical Oriented

Syllabus Includes:
- Electronic Component Study
- Professional Circuit Study
- Related Trouble Shooting Study
- Computer Hardware Repairs

காலம் 8 மாதங்கள்

ஆரம்பம் 28-01-2002 மாலை 3 மணி

மேலதிக விபரங்களுக்கு
Director, IIS - Jaffna

**கல்வி மற்றும் சமூக வளர்ச்சி நிதிக்காக**
**சுன்னாகம் றோட்டறக்ட் கழகம்**
நடத்தும் இசைவிருந்து
சாரங்கா இசைக்குழுவின்

**இராஜ ராகம்**

காலம்:- இன்று (28.01.2002) திங்கட்கிழமை
இடம்:- மானிப்பாய் பிரதேச சபை - ரவீந்திரன் மண்டபம்
நேரம்:- மாலை 2.00 மணி.

காணத்தவறாதீர்! அனைவரும் வாரீர்!!

*முக்கிய குறிப்பு:-* காலை நடைபெறவிருந்த நிகழ்வு மாலை நிகழ்வோடு இணைக்கப்பட்டுள்ளதால் அதன் நுழைவுச்சீட்டு மாலை செல்லுபடியாகும்.

(C/20497) - தலைவர்.

உ
சிவமயம்

**புதுக்கடைத் திறப்புவிழா அழைப்பு**

அன்புடையீர்!

நிகழும் விஷு வருடம் தை மாதம் 15ஆம் திகதி (28.01.2002) திங்கட்கிழமை நண்பகல் 12.56 முதல் 1.26 மணிவரையும் உள்ள சுப முகூர்த்த வேளையில்

**சிறி நதியா கட்டடம்**

**சிறி நதியா நகை மாளிகை**

**சிறி ரூபா நகை மாளிகை**

என்னும் ஸ்தாபனங்களை வைபவ ரீதியாகத் திறந்து நடத்த இருப்பதால் அத்தருணம் தாங்களும் விழாவில் கலந்துகொண்டு சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

உரிமையாளரும்,
ஊழியர்களும்.

சிறி நதியா நகை மாளிகை,
இல.01 கஸ்தூரியார் வீதி, [வின்சர் தியேட்டர் அருகில்] யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.01.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.